விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 21 புதன்கிழமை (04.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 76

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## இலங்கையில் இன மதங்களிடையே
# பதற்றங்கள் நீடிக்கின்றது

### ஐ.நா.சிறப்பு அறிக்கையாளர் கவலை



(ஜெனிவா)

இலங்கையில் இனம் மற்றும் மதங்களிடையே பதற்றமான சூழ்நிலை தொடர்ந்து நீடிப்பதாக ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் அகமட் ஷஹீட் கவலை வெளியிட்டுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## தரம் - 5
### மாணவர்களுக்கான
## புலமைப் பரிசில்
மாதிரி வினாத்தாள் உள்ளே...

## வெடிமருந்து வைத்திருந்த குற்றச்சாட்டில்
### வல்வெட்டித்துறையில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பகுதியில் வெடிமருந்து 850 கிராம் 23

### வாள்களுடன்
## வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் விசேட அதிரடிப் படையினரின் ரோந்து நடவடிக்கையின் போது இருவர் கைது செய்யப்பட்டதுடன் வாளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 23

### தாயின் குரல் கேட்டு
## வீதிக்கு குறுக்கே ஓடிய சிறுவன் ஹயஸில் மோதி பலி
### புன்னாலைக்கட்டுவனில் சோகம்

(யாழ்ப்பாணம்)

நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை தாயார் கூப்பிட்டபோது வீதியின் குறுக்காக வீட்டிற்கு ஓடி வந்த சிறுவனை ஹையஸ் வாகனம் மோதியதில் குறித்த சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்த விபத்து சம்பவத்தில் ஈவினை புன்னாலைக் கட்டுவன் பகுதியைச் 23

### நுண் கடன்களிலிருந்து
## வடக்கு மக்களை மீட்க பிரதமர் மகிந்த நடவடிக்கை

(கொழும்பு)

நுண்நிதி நிறுவனங்களின் அதிக வட்டி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை அதிலிருந்து விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைவாக வழங்கப்படும் குறைந்த வட்டியிலான கடன் தொகையை 40 ஆயிரம் ரூபாயிலிருந்து 60 ஆயிரம் ரூபாய் 23

### நாகர்கோவில் கடலில்
## 281 கிலோ கிராம் கேரளகஞ்சா மீட்பு



(கரணவாய்)

யாழ்ப்பாணம் - நாகர்கோவில் கடலில் 281 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் பெருமளவு கேரளக் கஞ்சாவைக் கடல் வழி மூலம் நாட்டிற்கு கடத்த முற்பட்ட 23

### கொரோனா வைரஸ் தாக்கம்
## ஜெனிவா கூட்டத் தொடர் திடீரென இடை நிறுத்தம்

(ஜெனிவா)

கொரோனா, வைரஸ் தாக்கம் காரணமாக ஜெனிவாவில் இடம்பெற்று வந்த 43ஆவது மனித உரிமைக் கூட்டத் தொடரின் பக்க நிகழ்வுகள் மற்றும் சில உள்ளக நிகழ்வுகள் என்பன திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் கொரோனா 23

### அதிக வெப்பம்
## அவதானமாக இருங்கள்
### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

அதிக வெப்பம் நிலவுவதால் அவதானமாக இருக்குமாறு 23

### அதிக இரத்தப்போக்கு
## இளம் கர்ப்பிணி தாய் கிளிநொச்சியில் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

அதிக இரத்தப்போக்கு காரணமாக இளம் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கிளிநொச்சியில் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி சம்புக்குளம் கல்மடு பகுதியைச் சேர்ந்த 23

## 6 1/2 பவுண் தாலிக்கொடி மிருசுவில் வடக்கில் அறுப்பு
### மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கைவரிசை

(மிருசுவில்)

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் 6 1/2 பவுண் தாலிக்கொடி அறுப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் மிருசுவில் வடக்கு கள்ளுத் தவறணைக்கு 23

## தேர்தல் சட்டங்கள் இன்று முதல் அமுலில்
### – மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ளதால் இன்று முதல் தேர்தல் சட்டங்கள் நடைமுறையில் உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். 23

### யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட

# பாடசாலை வீதிகளை ஒரு வழிப்பாதையாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ்.இந்து மகளிர் கல்லூரி மற்றும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை வீதிகளை பாடசாலை முடிவுறும் நேரங்களில் ஒரு வழிப்பாதையாக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபையில் நேற்றைய தினம் இடம்பெற்ற சபை அமர்வில் குறித்த யோசனை முன்வைக்கப்பட்டது.

குறித்த பாடசாலைகள் முடிவுறும் நேரங்களில் அதிகளவான வாகன நெரிசல்கள் காணப்படுவதுடன் பொலிஸாரும் வீதிக் கடமையில் ஈடுபடுவதில்லை எனக் குற்றச்சாட்டு உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் பதிலளித்த யாழ்.மாநகர சபை முதல்வர், குறித்த விடயம் தொடர்பில் வட மாகாண ஆளுநருடன் விரைவில் கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தார். (ம-10)

# விபத்தில் பெண் உயிரிழப்பு அதிர்ச்சியில் சகோதரி மரணம்

தனது சகோதரி உயிரிழந்த செய்தியைக் கேள்வியுற்ற பெண் ஒருவர் அதிர்ச்சியில் உயிரிழந்தார்.

கொழும்புத்துறை-குருநகர் பிரதான வீதியில், பெப்ரவரி 20ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த பெண் உயிரிழந்திருந்தார். ஜோன்சன் வலன்சன் ஜெகதீஸ்வரி (வயது 42) என மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண் உயிரிழந்ததை அறிந்த அவரது சகோதரியான ஜோர்ஜ் கெனடி றஞ்ஜினி (வயது 57) எனபவர் அதிர்ச்சியில மயங்கிவிழுந்து உயிரிழந்துள்ளார். (ம)


## வீடு - அறைகள் வாடகைக்கு

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் 1ம் குறுக்குத் தெருவில் 1500 ச.அடி கொண்ட வீடு - அறைகள் உடனடியாக வாடகைக்கு உண்டு. மருத்துவபீட மாணவர்கள் அல்லது அலுவலகங்களில் வேலை செய்வோர் அல்லது குடும்பமாக தங்கியிருக்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். (2472)

தொ.பேசி இல. 0774792567


## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர் திரு. **த.சிவசோதி** அவர்களின் அன்பு மாமியார்

அமரர்

**தங்கராசா ஞானேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்** (2471)

***யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்***





## வாராந்தம்


செவ்வாய்க்கிழமை

3.00 - 4.00

(C-9399)

DMI JAFFNA


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண காணி மாவட்டப் பதிவகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **நீந்துஜா வினோத்குமார்** அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **சந்திரவதனா தர்மகீர்த்தி**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**

**உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகமும் காணி மாவட்டப் பதிவகமும் யாழ்ப்பாணம்.** (2467)

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA
## Sports Science Unit,
## Higher Diploma in Physical Education

**Academic Year-2020/2021**

Applications are invited from those who wish to follow the Higher Diploma in Physical Education to be conducted by the University of Jaffna for the Academic Year 2020/2021.

Applicants should satisfy the requirements given below.

Minimum Educational Qualifications:

1. Should have passed in three subjects in the G.C.E (A/L) in one and the same sitting and should have the Minimum Qualification required by the University Grants Commission for university admissions in SriLanka

Or

2. A Candidate who has **SLQF Level 3 or NVQ Level 5** Diploma certificate in the relevant field.

**Selection:**
The Selection will be based on the performance of the applicants in a written examination, practical assessment and an oral examination conducted by the University.

These examination and practical assessment tests will be held at the University of Jaffna, Thirunelvely.

**Note:** Preference will be given to those candidates who have participated in sports and athletics and won places at District level, Province level and National level.

**Age:** Should be in the age group between 18 and 28 Years.
The University Senate may relax the age requirement in the case of candidates who are already in the Sports Profession in Government and Non-Government Sectors.

**Duration:** Two Years(Both Fulltimeand Part-time)

**Medium:** Tamil

**Course Fee and registration fee etc.**
(All inclusive) **: Rs. 73,000.00**

Application Forms could be obtained from the Deputy Registrar/ Admissions Branch, University of Jaffna upon a payment of RS. **500/=**, which should be deposited at the Jaffna University account number **162-1-001-8-0000902** at the peoples bank on or before **27.03.2020.**

The duly filled Application forms should reach by post or by hand to the **Deputy Registrar, Admission Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna.**

The application forms can be downloaded from Jaffna university web site: www.jfn.ac.lk

**03.03.2020**
**Registrar**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 20.01.2020 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தின் அன்புச் செல்வன்

அமரர்

**ரவீந்திரன் தனுஷன்**

**(றெமோ)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.03.2020) புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் சபீண்டிகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்களை தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அத்தாய், அல்வாய்.**
**தொ.பே: 076 3488323** (2465)

தகவல்:-
**குடும்பத்தினர்**

# ஒன்றுபட்டால் மீண்டும் ஆட்சியமைக்கலாம்

## ஐ.தே.க. நம்பிக்கை

(கொழும்பு)

**அரசாங்கத்தின் நடவடிக்கையில் மக்கள் விரக்தியுற்று வருகின்றனர். அதனால் ஐக்கிய தேசிய கட்சியினர் ஒன்றுபட்டு செயற்பட்டால் மீண்டும் ஆட்சியமைக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது என ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்துடன் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நூறுநாட்களில் மக்கள் எதிர்பார்த்த எதுவும் கிடைக்கவில்லை. அதனால் அரசாங்கம் மக்கள் செல்வாக்கை இழந்து வருகின்றது. அரசாங்கம் சீன சரணங்கட்சாமி என்ற கொள்கையையே பின்பற்றி சென்றது. ஆனால் இன்று சீனா கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு ஆளாகி இருப்பதால் அரசாங்கத்துக்கு நிதி உதவிகளை பெறுவதற்கு வேறு வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. சீனாவை மாத்திரமே நம்பி அரசாங்கம் செயற்பட்டுவந்தது.

அத்துடன் நாட்டைகொண்டு செல்ல அரசாங்கத்துக்கு முடியாமல் இருக்கின்றது. நிதி வழங்குவதற்கு வேறுநாடுகள் இல்லை. சீனா எதிர்கொண்டுள்ள பிரச்சினை காரணமாக எமது நாட்டின் சுற்றலாத்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (7-9)

# ஐ.தே.கட்சிக்கு 50 வீதத்துக்கும் குறைவான வாக்குகளே கிடைக்கும்

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டாக பிளவடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு பொதுத் தேர்தலிலும் 50 வீதத்திற்கு குறைவான வாக்குகளே கிடைக்கும் என அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, தெரிவித்தார்.

கொழும்பில், செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறான தீர்வுகளை முன்வைக்க முயற்சித்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியினர் இரண்டாக பிளவடைவதை நிறுத்த யாராலும் முடியாது.

ஜனாதிபதித் தேர்தலின்போது அனைத்துத் தரப்பினரும், ஒன்றாக இணைந்து சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்தபோதிலும்கூட, அவர்களால் அந்தத் தேர்தலில் வெற்றி பெற முடியாதுபோனது.

ஐக்கியமாக இருந்தே 50 வீத வாக்குகளை பெற முடியாத இந்தத் தரப்பினர், இன்று இரண்டு அணிகளாக பிளவடைந்துள்ளார்கள். இதிலிருந்தே, இவர்களின் தோல்வி உறுதியாகியுள்ளது. இதனை புதிதாக நாம் கூற வேண்டிய அவசியமில்லை" என மேலும் தெரிவித்தார். (7-9)



# ரவி கருணாநாயக்கவை கைதுசெய்ய உத்தரவு!

(கொழும்பு)

மத்திய வங்கி மோசடி தொடர்பாக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பேரை கைது செய்வதற்கு நீதிமன்றில் பிடியாணை உத்தரவை பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்தார்.

அந்தவகையில் சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பரிவர்த்தனைகள் தொடர்பாக ரவி கருணநாயக்க, அர்ஜுன் அலோசியஸ், அர்ஜுன மகேந்திரன், கசுன் பலிசேன, ஜெஃப்ரி அலோசியஸ் மற்றும் ஏழு பேரை கைது செய்ய இந்த பணிப்புரை விடுக்கப்பட்டது. (ஐ)



# கழுகு போன்று தாக்குவேன்.

## முன்னாள் ஜனாதிபதி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கழுகு போன்று தாக்கி வெற்றி பெறுவேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் இடம்பெற்ற தேர்தல் முன்னோட்ட பிரசாரத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் நடைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது நீர்க்காகம் ஒன்று குளத்தில் இருந்து மீன் ஒன்றை கவ்விக்கொண்டு ஒரு பாறையில் அமர்ந்து உண்ண ஆரம்பித்தது.

இதன்போது ஏற்கனவே அதனை வானத்தில் இருந்து நோட்டமிட்டுக்கொண்டிருந்த கழுகு ஒன்று உடனடியாக கீழே வந்து நீர்க்காகத்திடம் இருந்து மீனை பறித்துச் சென்றது.

இந்த கழுகைப்போன்றே நானும் தாக்குதல் நடத்தி எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றி பெறப்போகிறேன். பொலநறுவையில் இருந்து அரசியல் செய்வோர் எப்போதும் தோல்வியடைந்ததில்லை என மேலும் தெரிவித்தார். (7-9)



# மைத்திரிக்கு கால அவகாசம்

## உச்ச நீதிமன்று வழங்கியது

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பை வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தாக்கல் செய்யப் பட்டிருந்த அடிப்படை உரிமை மனுக்கள் குறித்து எதிர்ப்பு தெரிவிப்பதாயின், அடுத்த மூன்று வாரங்களுக்கு முன்னர் அதனை தெரிவிக்குமாறு குறிப்பிட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற நீதியரசர்கள் எல்.டி.பீ.தெஹிதெனிய, பிரீதி உத்மன் சூரசேன மற்றும் எஸ்.துரைராஜா ஆகியோர் இந்த உத்தரவை நேற்று முன்தினம் பிறப்பித்தனர்.

ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் போயுள்ளதாகக் கூறப்படும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி மற்றும் மாற்றுக் கொள்கைகள் பிரிவின் நிறைவேற்று பணிப்பாளரும் பேராசிரியருமான பாக்கியஜோதி சரவணமுத்து ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்படி கால அவகாசம் வழங்கப்பட்டது. (7-9)

# இலங்கையில் 90,000 இற்கும் அதிகமான போதைப்பொருள் பாவனையாளர்கள்

## புள்ளிவிபரத் தகவலில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 90,000 இற்கும் மேற்பட்ட போதைப்பொருள் பாவனையாளர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் 18-30 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் (பிஎன்பி) புள்ளிவிபரங்களில் தெரிவிக்கின்றன.

அவர்களில் சுமார் 60,000 பேர் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் என்று பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் இயக்குநர் எஸ்.எஸ்.பி.மஞ்சுள சேனாரத் தெரிவித்துள்ளார். ஹெரோயின், கொகெய்ன், ஐஸ் மற்றும் போதைப்பொருள் போன்ற செயற்கை போதைப் பொருட்கள் இந்த பயனர்களிடையே பிரபலமாக உள்ளன.

இலங்கையிலேயே போதைப் பொருள் பாவனை மேற்கு மாகாணத்தில் அதிக விகிதத்தில் உள்ளன என்பதையும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க விஷம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் (திருத்தம்) சட்டத்தின் கீழ், 2013, ஜனவரி 1 முதல், 56 குற்றவாளிகளுக்கு போதைப்பொருள் தொடர்பான வழக்குகளின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 153 குற்றவாளிகள் ஆயுள்தண்டனை பெற்றுள்ளனர். இதேபோன்ற வழக்குகளில் 370 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (7-9)

# மதத் தலைவர்களை தெளிவுபடுத்த நடவடிக்கை

(கொழும்பு)

மதஸ்தலங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவது தடுக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் அனைத்து மதத் தலைவர்களையும் தெளிவுபடுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய உள்ளிட்ட அதன் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று மல்வத்து, அஸ்கிரிய மகா நாயக்கர்களை தரிசித்து இது தொடர்பில் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுத்திருந்தது.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போது மகிந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-9)

## வேகப் பந்துவீச்சு குழுவில் சில மாற்றங்கள் கொண்டுவரப்படும் – விராட் கோலி

இந்திய டெஸ்ட் அணி வேகப்பந்து வீச்சு குழுவில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியது அவசியம் என விராட் கோலி தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் அணி கடந்த சில வருடங்களாக இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், முகமது ஷமி, உமேஷ் யாதவ், பும்ரா ஆகிய வேகப்பந்து வீச்சாளர்களை கொண்டு விளையாடி வருகிறது.

இதில் இஷாந்த் சர்மாவுக்கு 32 வயதும், உமேஷ் யாதவுக்கு 33 வயதும், முகமது ஷமிக்கு 29 வயதும், புவனேஷ்வர் குமாருக்கு 30 வயதும் ஆகிறது. பும்ராவுக்கு 26 வயதாகிறது.

இந்த ஐந்து பந்து வீச்சாளர்களில் நான்கு பேரை வெளிநாட்டு தொடருக்கு இந்திய அணி அழைத்துச் செல்லும். ஆனால் யாராவது ஒருவருக்கு காயம் ஏற்பட்டு விட்டால் சிக்கலாகி விடும். இங்கிலாந்து தொடரின்போது புவனேஷ்வர் குமார், பும்ரா ஆகியோரால் விளையாட முடியவில்லை.

தற்போது முடிந்த நியூசிலாந்து தொடருக்கு புவனேஷ்வர் குமார் தயாராகவில்லை. நன்றாக ஸ்விங் ஆகிய ஆடுகளத்தில் அவர் இருந்திருந்தால் போட்டி நிச்சயமாக மாறியிருக்கும். முதல் போட்டியில் இஷாந்த் சர்மா சிறப்பாக பந்து வீசினார்.

ஆனால் 2-வது டெஸ்டுக்கு முந்தைய நாள் அவருக்கு காயம் ஏற்பட்டது. இதனால் உமேஷ் யாதவ் அணியில் சேர்க்கப்பட்டார். ஸ்விங் ஆடுகளத்தில் ரிவர்ஸ் ஸ்விங் மன்னர்களான முகமது ஷமி மற்றும் உமேஷ் யாதவால் புதுப்பந்தில் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

தற்போது அவர்களுக்கு வயதாகி கொண்டே வருவதால் வேகப்பந்து வீச்சு யூனிட்டில் சிறு மாற்றங்கள் கொண்டு வரவேண்டியது அவசியம் என இந்திய அணி கேப்டன் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விராட் கோலி கூறுகையில் "தற்போது விளையாடி வரும் இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர்கள் இளம் வயதை கொண்டிருக்கவில்லை. ஆகவே இதை கவனமாகவும், விழிப்புடனும் கையாள வேண்டும். இதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவர்களுக்கான மாற்று வீரர்களை தயார் செய்து அவர்களை எப்போது வேண்டுமென்றாலும் களத்தில் விளையாட வைக்க தயாராக இருக்க வேண்டும்.

அடுத்த மூன்று அல்லது நான்கு வேகப் பந்து வீச்சாளர்களை அடையாளம் காண்பது அவசியம். சில வீரர்கள் காயத்தால் விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அவர்கள் தயார் நிலையில் வைத்துக் கொள்ள முடியும்.

கிரிக்கெட்டில் மாற்றம் என்பது நடைபெறும் நிகழ்வுதான். அந்த சிறிய மாற்றங்கள் எப்போது வேண்டுமென்றாலும் நடக்கும். அதைப்பற்றி தெரிந்து வைத்திருப்பது அவசியம். தனிப்பட்ட முறையில் ஒருவரது கிரிக்கெட் வாழ்க்கையை நசுக்க முடியாது. அவர்கள் சிறப்பாக விளையாடும்போது, மாற்று வீரர்கள் தேவையில்லை. இந்த மாற்றங்கள் நடக்கும் என்பது எங்கள் அணியில் உள்ளவர்களுக்கு நன்றாக தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

நவ்தீப் சைனி எங்களது திட்டத்தில் உள்ளார். இன்னும் இரண்டு மூன்று வேகப்பந்து வீச்சாளர்கள் மீது பார்வை உள்ளது. அவர்களின் விளையாட்டு தரம் சர்வதேச அளவில் மிகவும் உயர்வாக இருக்க வேண்டும். அதை கவனமாக கையாள்வது அவசியம்" என்றார்.

## டோக்கியோ ஒலிம்பிக் தொடரை ஒத்திவைக்க முடியும் ஜப்பான் மந்திரி சொல்கிறார்



கொரோனா வைரஸ் அச்சுறுத்தி வரும் நிலையில் டோக்கியோ ஒலிம்பிக் தொடரை ஒத்திவைக்க முடியும் என ஜப்பான் மந்திரி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜூலை 24-ந்தேதியில் இருந்து ஆகஸ்ட் 9-ந்தேதி வரை ஒலிம்பிக் போட்டி நடைபெற இருக்கிறது. ஆனால் சீனாவில் கண்டு பிடிக்கப்பட்ட மிகவும் மோசமான கொரோனா வைரஸ் தற்போது உலகளவில் பரவி வருகிறது.

ஜப்பானில் கொரோனாவின் தாக்கம் அதிக அளவில் இருக்கிறது. மே மாதத்திற்குள் கொரோனா கட்டுக்குள் வரவில்லை என்றால் ஒலிம்பிக் போட்டி நடைபெறாது என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தெரிவித்திருந்தது.

இதனால் போட்டி நடக்குமா? என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில் ஜப்பானில் இன்று நடைபெற்ற நாடாளுமன்றத்தில் ஒலிம்பிக் தொடரை ஒத்திவைக்க முடியும் என்று ஒலிம்பிக் போட்டிக்கான ஜப்பான் மந்திரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜப்பான் மந்திரி செய்கோ ஹாஷிமோட்டோ கூறுகையில் "போட்டியை நடத்தும் நாட்டின் ஒப்பந்தத்தின்படி 2020-க்குள் போட்டி நடத்த முடியாவிட்டால் மட்டுமே சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் போட்டியை ரத்து செய்ய முடியும்.

ஆனால், ஒலிம்பிக் போட்டியை 2020 நடத்த முடியும். இதனால் எங்களால் போட்டியை ஒத்திவைக்க முடியும். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி மற்றும் டோக்கியோ மாநகராட்சி இணைந்து ஜூலை 14-ந்தேதி போட்டியை தொடங்குவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது" என்றார்.

## இந்திய மல்யுத்த வீராங்கனைகள் 6 பேர் 'கொரோனா' பீதியால் விலகல்



உக்ரைனில் நடைபெறும் பயிற்சி முகாமில் பங்கேற்க இருந்த இந்திய மல்யுத்த வீராங்கனைகள் 6 பேர் கொரோனா அச்சத்தால் விலகி உள்ளனர்.

உயிர்கொல்லியான கொரோனா வைரஸ் தாக்குதல் உலகம் முழுவதும் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது. 60-க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள இந்த வைரசுக்கு இதுவரை 3,100 பேர் வரை பலியாகி உள்ளனர்.

கொரோனா வைரஸ் காரணமாக ஜப்பானில் ஜூன், ஜூலை மாதம் நடைபெற உள்ள உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி ரத்து செய்யப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த வைரஸ் காரணமாக பல விளையாட்டுப்போட்டிகள் ரத்தாகி இருந்தது.

இந்த நிலையில் உக்ரைனில் நடைபெறும் பயிற்சி முகாமில் பங்கேற்க இருந்த இந்திய மல்யுத்த வீராங்கனைகள் 6 பேர் கொரோனா அச்சத்தால் விலகி உள்ளனர். ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற ஹரிஷ் போகட் (53 கிலோ) வினிஷ் நிர்மலா (50 கிலோ), அன்சு மாலிக் (57 கிலோ), சோனம் மாலிக் (62 கிலோ), திவ்யா (68 கிலோ), கிரண் (76 கிலோ) ஆகியோர் விலகி உள்ளனர். அவர்கள் லக்னோவில் பயிற்சி பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக மலேசியாவில் நடைபெற இருந்த அஸ்லின் ஷா சர்வதேச ஆக்கி போட்டி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 11-ந்தேதி முதல் 18-ந்தேதி வரை நடைபெற இருந்த இந்த ப்போட்டி செப்டம்பர் 24-ந்தேதி முதல் அக்டோபர் 3-ந்தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டது.

இதேபோல கட்டார் மற்றும் தாய்லாந்தில் நடைபெற இருந்த மோட்டார் கிராண்ட் பிரிபந்தயமும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

## சேப்பாக்கம் மைதானத்தில் டோனிக்கு உற்சாக வரவேற்பு

ஐ.பி.எல். போட்டியின் பயிற்சிக்காக வித்தியாசமான சிகை அலங்காரத்துடன் சேப்பாக்கம் மைதானத்திற்கு வந்த டோனிக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் வெற்றிகரமான கேப்டன் மகேந்திர சிங் டோனி.

38 வயதான அவர் 2 உலக கோப்பையை வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்தார். 2007-ம் ஆண்டு 20 ஓவர் உலக கோப்பையும், 2011-ம் ஆண்டு ஒருநாள் போட்டி உலக கோப்பையும் அவரது தலைமையிலான இந்திய அணி கைப்பற்றி முத்திரை பதித்தது.

3 வடிவிலான போட்டிகளுக்கும் கேப்டனாக இருந்த அவர் 2014-ம் ஆண்டு இறுதியில் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றார். ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் கேப்டன் பதவியில் இருந்து விலகிய டோனி அந்த போட்டிகளில் மட்டும் ஆடி வந்தார்.

கடந்த ஜூலை மாதம் இங்கிலாந்தில் நடந்த உலக கோப்பையோடு அவர் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் தனது ஓய்வை அறிவிக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்.

அக்டோபர் மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் 20 ஓவர் உலக கோப்பை போட்டியில் விளையாடிவிட்டு அதோடு ஓய்வு பெற டோனி திட்டமிட்டுள்ளார்.

மார்ச் 29-ந் தேதி தொடங்கும் ஐ.பி.எல். போட்டியில் அவர் விளையாடுகிறார். இதில் அவர் திறமையை வெளிப்படுத்தினால் மட்டுமே வாய்ப்பை பெறுவார்.

ஆனாலும் இந்திய அணி நிர்வாகமும், கிரிக்கெட் வாரியமும் டோனி குறித்து எந்த கருத்தையும் தெரிவிக்காமல் உள்ளது.

அதே நேரத்தில் வீரர்களுக்கான ஒப்பந்த பட்டியலில் இருந்து டோனி கழற்றிவிடப்பட்டுள்ளார். இதனால் அவரது சர்வதேச கிரிக்கெட் எதிர்காலம் முடிந்துவிட்டதாக கருதப்படுகிறது.

ஆனாலும் தனது அடுத்த கட்ட நிலை குறித்து டோனி கருத்து எதுவும் கூறாமல் மௌனமாக இருந்து வருகிறார்.

உலக கோப்பை அரைஇறுதிக்கு பிறகு 8 மாதங்கள் அவர் எந்தப்போட்டியிலும் ஆடாமல் இருக்கிறார்.

இந்த நிலையில் ஐ.பி.எல். போட்டியின் பயிற்சிக்காக டோனி வித்தியாசமான சிகை அலங்காரத்துடன் சென்னை வந்தார்.


நட்சத்திர ஓட்டலில் தங்கி இருந்த அவர் நேற்று முன்தினம் சேப்பாக்கம் மைதானத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டார்.

சிறிது தூரம் ஓடிய பிறகு உடற்பயிற்சியில் டோனி ஈடுபட்டார். பின்னர் வலை பயிற்சியிலும் ஈடுபட்டார். அப்போது வழக்கம் போல பெரிய ஷாட்களை அடித்து ரசிகர்களுக்கு விருந்தளித்தார்.

முன்னதாக மைதானத்துக்கு வந்த டோனிக்கு சென்னை ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். ஸ்டேடியத்தில் அவருக்காக காத்திருந்த ஏராளமான ரசிகர்கள் அவர் உள்ளே நுழைந்த போது டோனி, டோனி என்று கோஷமிட்டு மகிழ்ச்சி பொங்க வரவேற்றனர்.

டோனியுடன் சக வீரர்கள் அம்பதிராயுடு, முரளி விஜய், பியூஸ் சாவ்லா, கரண் சர்மா, உள்ளூர் வீரர்கள் சாய் கிஷோர், ஜெகதீசன் ஆகியோரும் பயிற்சியில் ஈடுபட்டனர்.

டோனி தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 3 முறை ஐ.பி.எல். கோப்பையை கைப்பற்றியுள்ளது. மேலும் 5 தடவை 2-வது இடத்தையும் பிடித்துள்ளது.



ஓவியரும் விரிவுரையாளருமான எஸ்.சண்முகராஜாவின் "உயிர்ப்பு" கழிவுப் பொருட்களினால் ஆன கலைக் கண்காட்சியின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் சாவகச்சேரியில் அமைந்துள்ள ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூட்டத்தில் ஆரம்பமானது. டாக்டர் தர்மா அழகரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானமும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.சனாதனனும் கௌரவ விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் கழிவுப் பொருட்களால் ஆன கண்காட்சி நிகழ்வை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் கோண்டாவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டனர்.

# சுனாமி ஒத்திகை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினாலும் யாழ்.மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ இணைப்பலகினாலும் நாளை 5 ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், சித்தி விநாயகர் வித்தியாசாலை, தம்பசிட்டி அமெரிக்க மிசன் பாடசாலை ஆகியவற்றை உள்ளடக்கி சுனாமி ஒத்திகை நிகழ்வு நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான முன்னாயத்த ஒத்திகை என்பதால் எவரும் பீதியோ குழப்பமோ அடைய வேண்டாமென பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (ஐ-2)

# வழிகாட்டல் கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக நூலகங்களும் பாடசாலை நூலகங்களும் பொதுசன நூலகங்களும் முறையான ஆவணப்படுத்தலினை மேற்கொள்வதற்கான வழிகாட்டல் ஒன்றினை மேற்கொள்ளும் பொருட்டு கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இக் கருத்தமர்வில் தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகர் கலாநிதி மணிமாறன் கலந்து கொண்டு கருத்துரை நிகழ்த்துவார். (ஐ-2)

# அடையாளம் தெரியாத ஏவுகணைகளை சோதித்த வடகொரியா

(பியாங்யாங்)



வடகொரியா அடையாளம் தெரியாத வகையிலான இரு ஏவுகணைகளை கடலில் ஏவி பரிசோதித்ததாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வடகொரியாவின் கிழக்கு கடலோரப் பகுதியிலுள்ள வோன்சான் பகுதியிலிருந்து கடல் பரப்பில் கிழக்கு நோக்கி இந்த இரு ஏவுகணைகளை ஏவி வடகொரியா சோதனை செய்துள்ளதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

சுமார் 240 கி.மீ.தூரம் பயணித்த அந்த ஏவுகணைகள், கண்டம் விட்டு கண்டம் பாயக் கூடிய குறைந்த தொலைவு ஏவுகணைகளாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதுபோன்ற ஏவுகணைகள் மேலும் ஏவப்படலாம் எனவும் இதனை தொடர்ச்சியாக கண்காணித்து வருவதுடன், எதற்கும் தயார் நிலையில் இருந்து வருவதாகவும் தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் வடகொரியா ஏவுகணைச் சோதனை நடத்தியது இதுவே முதல் முறையாகும்.

நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய வகையிலான் ஏவுகணைகளின் பரிசோதனைக்கான தடை உத்தரவை விலக்கிக் கொள்வதாக வடகொரியா அறிவித்து சில வாரங்கள் ஆகியுள்ள நிலையில், அந்நாடு ஏவுகணைச் சோதனை நடத்தியதாக தென்கொரியா தெரிவித்துள்ளது. (ஐ-2)

# மரண அறிவித்தல்

## திருமதி ஏகாம்பரம் பவானி (ரதி)



மண்டைதீவு, 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 217, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக்கொண்ட திருமதி ஏகாம்பரம் பவானி அவர்கள் 02.03.2020 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - யோகம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற ஏகாம்பரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னாச்சி தம்பதிகளின் மருமகளும், தவமலர் (ஸ்ரீ), சுகதா (வலம்புரி), உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, மகேஸ்வரி (சித்திரம்), ஆனந்தநடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மோகனராஜா, பானுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராம், ஆரபி, ஹரிராம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராமசாமி மற்றும் சிவசோதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

217, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (C-9397)

தகவல் : குடும்பத்தினர்
தொடர்பு : 0779114634, 0773839650, 0771154249

# கைதிகளின் பாவனைக்காக புனர்நிர்மாணக் கட்டடங்கள்

(மட்டக்களப்பு)



மட்டக்களப்பு சிறைச்சாலையில் பாவனைக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட சிற்றுண்டிச்சாலை, கைதிகளுக்கான தங்குமிட அறைகள் உட்பட பல கட்டடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பதில் பிரதம சிறைச்சாலை அதிகாரி ஆர். மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் சுஜீர விஜேசேகர, சிறைக்கைதிகளின் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ராஜன் மயில்வாகனம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மேற்படி புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்தனர்.

கைதிகளுக்கான சிற்றுண்டிச்சாலை, கைதிகளைப் பார்வையிட வருபவர்களுக்கான தங்குமிட அறை, அரச விருந்தினர்கள் வரவேற்பு அறை, மதவழிபாட்டுத் தலங்கள், கைதிகளுக்கான தொழிற் பயிற்சி தையல் நிலையம், சிகை அலங்கார நிலையம், வைத்திய சிகிச்சை நிலையம் போன்றவை புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், சிறைச்சாலைக் கட்டடத்துக்கான பாதுகாப்புக் கமராக்களும் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் சுஜீர விஜேசேகர மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, சிறைச்சாலையின் பதில் பிரதம ஜெயிலர் ஆர்.மோகன்ராஜ் வழிகாட்டலின் கீழ், சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் நிதிப் பங்களிப்புடன் இவை புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு சிறைச்சாலை சிறைக்கைதிகளின் நலன்புரி சங்கத்தின் செயலாளர், பா.சுசிதரன் மற்றும் நலன்புரி சங்கத்தின் உறுப்பினர்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## திருநீற்று மகிமை

பசும்சாணம் ஒரு கிருமி நாசினி என்பதை அறிந்திருந்தார்கள் நம் முன்னோர்கள். இதனால் வீடு மெழுகுவதற்கும் வீட்டைச் சுற்றி தெளிப்பதற்கும் பசுஞ்சாணத்தைப் பயன்படுத்தினார்கள். பசுஞ்சாணம் நாற்றம் இல்லாதது. துர்நாற்றத்தைப் போக்குவது. எனவே திருநீறு தயாரிப்பதற்கு பசுஞ்சாணத்தைப் பயன்படுத்துகிறார்கள். பசுவின் உடலில் அனைத்து தேவர்களும் வாசம் செய்கிறார்கள் என்பது ஒருவித நம்பிக்கை. ஆதியில் சுடுகாட்டு சாம்பலை திருநீறாக அணிந்தவர்கள் பிற்காலத்தில் பசுஞ்சாணத்தில் தயாரிக்கப்பட்ட சாம்பலை திருநீறாக அணியத் தொடங்கியுள்ளனர்.

திரு நீறணிந்த சிவபெருமான் பூதகணங்களின் தலைவனாகக் கருதப்படுகிறார். எனவே பூதகணங்கள் எல்லாம் சிவனுக்கு கட்டுப்பட்டவை என்ற அடிப்படையில் பேய், பிசாசுகளைக்கண்டு பயந்தவர்களுக்கு திருவைந்தெழுந்தால் மந்திரிக்கப்பட்ட திருநீறை பூசம் வழக்கம் சிவபக்தர்களிடையே காணப்படுகிறது.

"மந்திரமாவது நீறு" என்கிறார் சம்பந்தப் பெருமான். எனவே திருநீறே மந்திரம் தான். திருநீறு அணியும் போது "ஓம் சிவாய நம" என்னும் பஞ்சாட்சரத்தை ஓதி அணிவது வழக்கம். இதனால் திருநீற்றிற்கு "பஞ்சாட்சரம்" என்ற பெயர் உண்டு.

திருநீற்றுக்கு வேறு சில பெயர்களும் உண்டு. அவை,

- விபூதி - இதன் பொருள் நிறைந்த செல்வத்தை அளிப்பது.
- பஸ்மம்-இதன்பொருள் பாவங்களைப் போக்குவது.
- பஸிதம்-இதன் பொருள் துக்கத்தைப் போக்குவது.
- சஷாரம்-இதன் பொருள் துக்கத்தைப் போக்குவது.
- ரஷா- இதன் பொருள் பாதுகாப்பு அளிப்பது.

சிவபெருமான் முன் அமர்ந்துள்ள காளையை (நந்தியை) சார்ந்த பசுக்கள் ஐந்து எனக் கூறப்படுகிறது. அவை,

- கபில வண்ணமுடைய நந்தை
- கருமை வண்ணமுடைய பத்திரை
- செவ்வண்ணமுடைய சுரபி
- வெண்ணிறமுடைய சுசீலை
- விசித்திர வண்ணமுடைய சுமனை எனப்படும்.

இவ்வைந்து பசுக்களிலிருந்தே விபூதி, பஸ்மம், பஸிதம், சஷாரம், ரஷா என்னும் ஐந்து வகையான திருநீறு உண்டானது என பிருகஜ்ஜாபலம் என்னும் உபநிடதம் கூறுகிறது.

### திருநீறு தயாரிக்கும் முறை

பசுஞ்சாணத்தை உருண்டைகளாக்கி வெயிலில் காய வைத்து அந்த உருண்டைகளை உமியினால் நன்கு மூடி நெருப்பூட்ட வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து உமியின் சாம்பலை நீக்கினால் பசுஞ்சாண உருண்டைகள் சாம்பல் உருண்டைகளாக இருக்கும்.

அவற்றை எடுத்து ஒரு துணியில் சலித்து வைத்துக்கொண்டால் அதுவே சிறந்த திருநீறாகும். இதுவே சுலபமாக திருநீறு தயாரிக்கும் முறையாகும்.

## வாகன இலக்கத்தகடுகள் பொதுமக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த 27 ஆம் திகதி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களப் பிரதி ஆணையாளர் அறிவித்தார்.

AAG-1789, AAH-7369, AAL-3896, AAL-8070, AAM-9628, AAS-9552, AAW-5393, AAY-7248, ABM-7103, ABM-9664, ABP-4771, ABS-2750, ABS-6759, ABS-9492, ABU-5029, ABU-5061, ABU-5063, ABU-5069, ABU-5078, ABU-5209, ABU-5281, ABU-5300, ABU-5304, ABU-5337, ABU-5416, ABU-5427, ABU-5435, ABU-5438, ABU-5482, ABU-5560, ABU-5562, ABU-5635, ABU-5660, ABU-5664, ABU-5667, ABU-5699, ABU-5712, ABU-5792, ABU-5845, ABU-6040, ABU-6096, ABU-6117, ABU-6200, ABU-6274, ABU-6326, ABU-6978, ABU-9959, ABV-2727, ABV-6324, ABV-7786, ABV-7979, ABW-0005, ABW-1000, ABW-1626, ABW-2727, ABW-2885, ABW-5677, ABW-5959, ABX-1000, ABX-1212, ABX-2222, ABX-3939, ABX-5252, ABX-5555, BAD-1698, BAJ-5733, BBZ-4725, BCL-2642, BCS-7534, BCS-8379, BDH-6370, BDL-2747, BDL-3668, BDY-6305, BEE-9533, BEV-5123, BFB-2435, BFM-1089, BGB-3017, BGC-0494, BGG-9153, BGP-3256, BGQ-9142, BIE-4100, BIJ-9546, BIO-1669, CAA-2707, CAB-4962, CAB-8038, CAC-2117, CAC-9447, CAF-1302, CAG-2082, CAH-3887, CAK-3061, CAL-4598, CAN-3570, CAO-3328, CAP-8761, CAQ-1217, CAT-4539, CAW-4835, CAW-9865, CPA-1915, CBB-4524, CBE-0541, DAB-0214, DAB-8690, GAA-2244, GB-8170, GD-5499, GG-3732, GG-7278, GH-5862, GL-1671, GN-6947, GO-4264, GP-1067, GP-4214, GQ-1817, GQ-2114, GX-5040, GT-2455, GW-0870, GX-9232, GZ-8645, HA-5924, HC-9926, HD-6513, HK-6794, HL-8579, HM-5748, HM-8556, HN-1988, HO-0846, HR-7808, HS-8327, HT-8098, HT-8158, HT-8250, HU-1197, HX-2360, HY-3971, JA-2409, JA-7361, JC-9931, JG-5762, JG-6222, JG-7387, JH-7502, JQ-6710, JT-1734, JX-0494, JX-4383, KA-4249, KE-2247, KG-4068, KJ-1646, KN-7351, KO-4601, KR-9083, KW-1878, KX-4683, LA-2232, LF-9172, LG-3264, LH-0179, LH-4169, LI-1105, LJ-3795, LK-0887, LK-8861, LN-2951, MR-3455, MB-3830, NA-2300, ND-1003, ND-9158, PB-0361, PB-3734, PB-4647, PC-0473, PC-4903, PD-8225, PD-9109, PD-9439, PE-3850, PE-5811, PF-0387, PF-0906, PI-3884, PJ-1791, PP-3337, PP-9560, PS-8473, PV-1635, PX-5283, PX-6883, PY-2467, QA-0864, QC-5356, QE-0696, QE-7855, QF-0403, QF-3153, QH-7859, QI-3583, QI-7628, QM-0548, QT-0800, RA-4988, RB-1646, RB-4638, RB-9745, RC-7710, RC-8953, RD-0489, RE-6167, RF-1986, RG-2261, SH-8442, SH-9564, SO-7267, TK-3042, TM-4460, TV-7912, UC-9045, UV-1568, VO-8251, VQ-0452, VR-0950, VS-5705, VZ-1559, WB-7958, WF-7045, WI-0118, WO-4581, WU-6432, WZ-2625, XB-4428, XB-9401, XE-5208, XJ-5258, XM-1092, XO-3739, XQ-5949, XR-3167, XT-1135, XT-5247, YC-9441, YH-1479, YN-2481, YQ-9662, YU-5840. போன்ற வாகன இலக்கத்தகடுகளாகும். (ஜ)

## இராசி பலன்

**மேடம்:** செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க நினைப்பீர்கள், சகோதர ஒற்றுமை மெலோங்கும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்,வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கடகம்:** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** பொன்னான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், செல்வாக்கு மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உறவினர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்:** வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் கவனம் தேவை.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர்கள் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரும்.

**மீனம்:** தூரத்தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | ராகு, சந் |
| சூரி | | | |
| புத | | | |
| சனி.குரு கேது.செவ் | | | |

சந்திராஷ்டமம் அனுஷம்

**04.03.2020**

மாசி 21, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

நவமி முற்பகல் 9.25 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 7.11 மணிவரை

சுபநேரம் 4.56-6.26 மணிவரை


இராகுகாலம் 12.26-1.56 மணிவரை

ஆயத்தம் செய்யாதவனுக்கு அனைத்தும் திடீர் மரணமே

வளவன்

# இலங்கை, இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றும் இசைவிழா ஏப்ரலில்

## கம்பவாரிதி இ.ஜெயராஜ் தெரிவிப்பு



(குப்பிழான்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் ஐந்து இந்தியக் கலைஞர்களும், நம் நாட்டுக் கலைஞர்களும் பங்குபெறும் இசை விழா ஐந்து நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாக அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஸ்தாபகர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தெரிவித்தார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.கம்பன் விழாவின் இந்த ஆண்டுக்கான நிறைவுநாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதலாம் திகதி பிற்பகல் நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த இசை விழாவில் அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறும், இந்த விழாவுக்குத் துணை செய்ய முடிந்தவர்கள் தங்களாலான பங்களிப்புக்களை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, கடந்தாண்டு முழுவதும் கம்பன் கழகம் எடுத்த முயற்சிகள் தடைப்பட்டுப் போயுள்ளன. கொழும்பு இராம கிருஷ்ண மிஷனில் நடந்த திருத்த வேலைகள் காரணமாக முன்னரே கொழும்பில் கம்பன் விழா நடத்துவோமெனக் காத்திருந்தோம்.

அதன் பின்னர் கொழும்பில் தொடர் குண்டுகள் வெடித்தன.

இதனால் விழா நடத்த தாமதமானது. பின்னர் வேறொரு திகதியை நிர்ணயித்ததால் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக கொழும்பு கம்பன் விழா மீண்டும் தாமதமாகியது.

இவ்வாறான நிலைமையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே அனைத்து விழாக்களையும் நடத்துவதென கம்பன் கழகம் முடிவு செய்துள்ளதாகவும் இ.ஜெயராஜ் மேலும் தெரிவித்தார். (ஜ-18)

# கச்சதீவு அந்தோனியார் திருவிழாவிற்கு செல்வோரின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவமானது இம்மாதம் 6,7 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. கச்சதீவு திருவிழாவிற்கு செல்வோருக்கான போக்குவரத்து சேவை 6 ஆம் திகதி அதிகாலை 5 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானிற்கு நடைபெறும்.

கடற்போக்குவரத்து அதிகாலை 6 மணி முதல் முற்பகல் 11 மணிவரை குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவிற்கு ஒருவழிக் கட்டணமாக 325 ரூபாவும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவிற்கு ஒருவழிக் கட்டணமாக 250 ரூபாவும் அறவிடப்படும் என்றும் தற்போது உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலாக பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பக்தர்களைப் பாதுகாக்கும் முற்பாதுகாப்பு நடவடிக்கையாக கைகளை சவர்க்காரமிட்டு கழுவி சுத்தமாய் பேணுவதுடன் பயணத்தின் பின் இரு வாரங்களுக்குள் காய்ச்சல் ஏற்படுமிடத்து அவர்கள் வசிக்கும் பிரிவிலுள்ள சுகாதார வைத்திய ஆலோசனையைப் பெறுமாறும் சுகாதார திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் பக்தர்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு பயணப் பொதிகள் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார். (ஜ-2)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9249)

ரெங்கசாமி கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: Electronical Engineering<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. கொழும்பில் படித்த பெண் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/10590 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பொது முகாமைத்துவம். கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. சிறந்த தலைமைத்துவம் உடையவராக இருக்க வேண்டும்.<br>தொ.இ: G/7334 |
| பிறப்பு: 1992 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்:180cm<br>தகைமை/தொழில்: தனியார் தொழில் (டென்மார்க்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண். தொழில் புரிபவர்<br>தொ.இ: B/10591 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில் க.பொ.த.உ.த. தபால்அதிபர்<br>எதிர்பார்ப்பு: B.Sc Degree Engineer, IT Job<br>தொ.இ: G/7338 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: செவ் 6 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10592 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 49 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MED. Teacher<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் துறை உத்தியோகம்<br>தொ.இ: G/7347 |
| பிறப்பு:1987 இந்து (சைவபோசனம்)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 32 செவ் 7 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில் B.Sc, M.Sc, பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு பட்டதாரி பெண் (சைவ போசனம் மட்டும்)<br>தொ.இ: B/10594 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 16 ½ செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer.<br>தொ.இ: G/7349 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



NSB National Savings Bank

## பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31/01/2019 ற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு இன்றுவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 21/03/2020 தொடக்கம் 29/03/2020 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெற உள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | முல்லைத்தீவு | 19/03/2020 | 21/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 02 | மல்லாவி | | | |
| 03 | கொடிகாமம் | 19/03/2020 | 21/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 04 | சாவகச்சேரி | | | |
| 05 | கிளிநொச்சி | | | |
| 06 | சுன்னாகம் | 19/03/2020 | 22/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 07 | காரைநகர் | | | |
| 08 | சங்கானை | | | |
| 09 | மானிப்பாய் | | | |
| 10 | வவுனியா | 19/03/2020 | 22/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 11 | நெல்லியடி | 26/03/2020 | 28/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 12 | அச்சுவேலி | | | |
| 13 | பருத்தித்துறை | | | |
| 14 | மன்னார் | 26/03/2020 | 28/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 15 | வங்காலை | | | |
| 16 | யாழ்ப்பாணம் | 26/03/2020 | 29/03/2020 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |
| 17 | யாழ்ப்பாணம், 2ம் கிளை | | | |
| 18 | ஊர்காவற்றுறை | | | |
| 19 | திருநெல்வேலி | | | |
| 20 | கோப்பாய் | | | |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வடபிராந்திய முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி.
(2449)

# விபத்தில் இராணுவ சிப்பாய் பலி

(கொழும்பு)

ஹங்வெல்ல பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இராணுவ சிப்பாய் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்து- மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவ சிப்பாய் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹங்வெல்ல பேருந்து நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற இந்த விபத்தில் பேருந்தின் சில்லுக்குள் இராணுவ சிப்பாய் சிக்குண்டார். நவகமுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

குருநாகல்-தொம்பொல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய வரே விபத்தில் உயிரிழந்தார். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# தேசிய செயற்பாட்டு பாதுகாப்புக்குழு கொரோனா தொடர்பில் தீர்மானம்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பில் தேசிய செயற்பாட்டு பாதுகாப்பு குழு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் நேற்று முற்பகல் சுகாதார அமைச்சில் கூடியது.

பின்னர் இதன்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக விசேட ஊடக சந்திப்பொன்று சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி கருத்துத் தெரிவிக்கையில்,

"சீன அரசாங்கம் இந்த வைரஸை தடுப்பதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதும் தற்போது சுமார் 262 நாடுகளுக்கு இந்த வைரஸ் பரவியுள்ளதால் ஐக்கிய நாடுகள் சபை போன்று சர்வதேச சுகாதார அமைப்பு ஆகியன இதனை உலகளாவிய அச்சுறுத்தலாக அறிவித்துள்ளன.

இதன் காரணமாக சுகாதார அமைச்சு என்ற வகையிலும் இது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள தேசிய செயற்பாட்டுக் குழு என்ற வகையிலும் இன்று காலை கூடிய கூட்டத்தின் போது நாம் சில தீர்மானங்களை மேற்கொண்டுள்ளோம்.

அதில் ஒரு தீர்மானமாக தென்கொரியா, இத்தாலி மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதனால் அந்நாடுகளில் இருந்து இலங்கை வரும் பயணிகளை 14 நாட்கள் தனிமைப்படுத்தி கண்காணிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்த வைரஸ் பரவல் நிலையை தடுப்பதற்காக அவ்வப்போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் தொடர்ந்தும் செயற்பாட்டுக் குழுவொன்று நாள்தோறும் கூடுவதற்கும் அது தொடர்பில் செயற்படுவதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இந்து பௌத்த கலாசார பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட வடக்கு மாகாண தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை 5 ஆம் திகதி வியாழக்கிழமை சங்கானை வீதி அச்சுவேலியிலுள்ள இந்து பௌத்த கலாசார பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு 077 271 1181 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஜ-2)

# நான்கு மாகாணங்களில் அதிக உஷ்ணம்

(கொழும்பு)

வடமேல், மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் மன்னார் மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் உஷ்ணமான காலநிலை நிலவுவதாக வளிமண்டளவியல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் அப்பகுதிகளில் மனித உடல் அதிக உஷ்ணம் அடையும் அபாயம் இருப்பதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வேலை செய்யும் இடங்களில் அதிகளவில் நீர் அருந்துமாறும் நிழல் உள்ள இடங்களில் இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளை அல்லது இளம் நிறமான ஆடைகளைப் பயன்படுத்துமாறும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-2)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி

(மித்தெனிய)

மித்தெனிய - காரியமடித்த - தபேதலாவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் பலியாகினார். சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான குறித்த நபரை எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபர் 36 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-2)

# வீடுகள்,வாகனங்களை கையளிக்குமாறு முன்னாள் அமைச்சர்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் முன்னாள் இராஜாங்க, பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திய உத்தியோக பூர்வ வாகனங்கள் மற்றும் வீடுகளை கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி விடயங்களை கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ளது. இத்தேர்தலானது நீதியானதும் சுதந்திரமானதுமானதாக அமையப்பெற வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகவும் அமைந்துள்ளது.

இக்காலக்கட்டத்தில் தேர்தலை சட்டங்களை மதித்து அனைத்து அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் செயற்பட வேண்டும்.

குறிப்பாக அரச சொத்துக்களை எக்காரணம் கொண்டும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு வேட்பாளர்கள் பயன்படுத்த கூடாது. இதனை கண்காணிக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைவாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் வீடுகளை கையளித்து விட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# நைஜீரியாவில் இலங்கையர்கள் கைது

(நைஜீரியா)

போலியான விமானப் பயணச் சீட்டுக்கள் இரண்டை வைத்திருந்த இலங்கையர்கள் இருவர் நைஜீரியாவில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

நைஜீரியாவின் அபுஜாவில் அமைந்துள்ள நெம்ட் அசிகியூ சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குறித்த இலங்கையர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மலேசியாவுக்கான போலியான விமானப் பயணச் சீட்டுக்கள் இரண்டை பயன்படுத்தி லண்டன் ஹீத்ரோ விமான நிலையம் நோக்கி செல்ல தயாராக இருந்த போது நைஜீரியாவின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வருடத்தினுள் நைஜீரியாவில் போலியான விமானப் பயணச் சீட்டுக்களுடன் இலங்கையர்கள் கைது செய்யப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

சட்டவிரோத விமானப் பயணச்சீட்டுக்களை பாவித்து நாட்டில் இருந்து வெளியேறுவதற்காக குறித்த சந்தேக நபர்கள் நைஜீரியாவின் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் சில அதிகாரிகளின் ஆதரவினை பெற்றிருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஜ-2)

# சாரணர்களுக்கான விருது வழங்கல்

0

சாரணர்களுக்கான விருது வழங்கலும் கௌரவித்தல் நிகழ்வும் நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் இன்று 4 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட சாரண ஆணையாளர் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக MOP திட்டத்தின் ஆலோசகர் மற்றும் வடக்கு மாகாண பயிற்சி இணைப்பாளர் செ.தேவரஞ்சன் தம்பதிகள் கலந்து கொள்ளவுள்ளதுடன் சாரணர்களுக்கு விருது வழங்கலும் கௌரவித்தலும் இடம்பெறும். (ஜ-136)




தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மனிக்கூட்டுக்கோபுர வீதியிலுள்ள ஸ்ரீலஷ்சுமி நாராயணன் திருமண மண்டபத்தில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவர்கள் 220 பேருக்கு கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சோற்றுக்கற்றாழை, கற்றாழை பூவின் மருத்துவ பண்புகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சோற்றுக்கற்றாழை அளவு மருத்துவக் குணங்கள் கற்றாழை பூவிற்கும் உண்டு. அதுவும் சோற்றுக் கற்றாழையின் பூ ஆனது செம்மஞ்சள் நிறத்துடன் காணப்படும்.


கற்றாழை, நீராரை, சிறுபின்னி, பற்படாகம், வெள்ளறுகு, வல்லாரை, பெருங்கரந்தை, விஷ்ணுகாந்தி, சிவனார்வேம்பு ஆகிய ஒன்பது மூலிகைகளும் சர்வசார மூலிகை என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது. கற்றாழை மூலிகையில் ஆனைக்கற்றாழை, எருமைக் கற்றாழை, காட்டுக்கற்றாழை, சிவப்பு சோற்றுக்கற்றாழை, சிறுகற்றாழை, சீமைக்கற்றாழை, சோற்றுக்கற்றாழை, பிள்ளைக்கற்றாழை, பெருங் கற்றாழை, பேய்க்கற்றாழை, மரக்கற்றாழை, மலைக்கற்றாழை, செங்கற்றாழை எனப் பலவகையுண்டு.

பொதுவாக கற்றாழைகள் வெப்பமண்டலப் பகுதிகளில் வளரக்கூடியது. இவை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அதிகம் பயிரிடப்படுகின்றது. பல பருவங்கள் வளரக்கூடிய குறுஞ்செடியாகும். இத் தாவரத்தில் அரிதாகவே விதைகள் காணப்படுவதுடன் வேருடன் கூடிய சிறிய பகுதியூடாகவே இனப் பரம்பல் மேற்கொள்ளப்படுகிறது.

பொதுவாக கடற்கரையோரங்களில் இயற்கையாக வளரக்கூடிய இத் தாவரத்தில் காணப்படும் நுங்கு போன்ற சோற்றுப் பகுதி (Gel) மிகுந்த மருத்துவப் பயன் உடையது. மேலும் வெண்மையான உள்ளீடு கொண்ட கற்றாழை வகை சோற்றுக்கற்றழை எனப்படுகிறது. இத் தாவரத்தின் சோற்றுப்பகுதியானது நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கற்றாழையை மிகப் பழங்காலம் தொட்டே மக்கள் அழகை மேம்படுத்தும் பொருட்டு பயன்படுத்தி வந்துள்ளார்கள். தீயினால் ஏற்பட்ட புண்கள் நாட்சென்ற காயங்கள், வயிற்றுப் புண், வயிற்று எரிவு ஆகிய நோய்களை இக் கற்றாழையானது துரிதமாகவும் இலகுவாகவும் குணப்படுத்தக் கூடியது.

விஞ்ஞான முறையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இம் மூலிகையானது முற்காலத்தில் சித்தர்களால் காய கற்ப மூலிகையாக பயன்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



இங்கு காயம் என்பது உடம்பையும் 'கற்பம்' என்றால் உடற்கலங்கை அழிய விடாது உடலை என்றும் பேணிப் பாதுகாப்பது என்றும் பொருள்படும்.


இவ்வளவு சிறப்புமிக்க இம்மூலிகையானது உணவாக மட்டுமன்றி உப உணவாகவும் சிறு கைமருத்துவ முறையாகவும் பயன்படுத்துவதால் அழகிய ஆரோக்கியமான வாழ்வைப்பெற முடியும்.

அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் கற்றாழையின் சோற்றுப் பகுதியானது தீப்புண்கள், நாட்பட்ட காயங்கள் மீது ஒரு படலமாக படிந்து பாதுகாப்பதோடு, காயங்களை ஆற்றும் சிறப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் உள்ள ஆலோக்டின் B என்னும் பொருள் நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டுவதோடு காயங்கள் விரைவில் ஆறுவதை துரிதப் படுத்துவதாக அவ் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### சோற்றுக் கற்றாழைக் கறி

தேவையாக பொருட்கள்:
கற்றாழைச் சோறு-தேவையான அளவு
தேங்காய்-சிறிய பாதி
செத்தல் மிளகாய்-3
கடலைப்பருப்பு-100 கிராம்
மஞ்சள் பொடி-1தேக்கரண்டி
உப்பு-தேவையான அளவு
தக்காளி-4
சின்னவெங்காயம்-தேவையான அளவு
கடுகு-1தேக்கரண்டி
கறிவேப்பிலை-4 நெட்டு
கொத்துமல்லிக் கீரை-1பிடி
பசுநெய்-20 கிராம்
பெருஞ்சீரகம்-1தேக்கரண்டி
மிளகு-1/2 தேக்கரண்டி.



தேங்காயைத் துருவி பெருஞ்சீரகம் வைத்து அரைத்து எடுத்துக் கொள்ளவும். வெங்காயத்தை பொடியாகவும் தக்காளியை நீளவாக்கிலும் அரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

வாணலியில் நெய்யை ஊற்றி கடலைப்பருப்பை நன்றாகப் பொரித்து எடுத்து பின்னர் கடுகு, மிளகாய் ஆகியவற்றை போட்டு வதக்கி அத்துடன் தக்காளி, கறிவேப்பிலை, பொடியாக நறுக்கிய மல்லிக்கீரை ஆகியவற்றை போட்டு வதக்கி உப்பு, அரைத்த தேங்காய் விழுது ஆகியவற்றை போட்டு கரைத்து ஊற்றி தாழிக்கவும். சோற்றுக் கற்றாழையின் சோற்றினை சிறு சிறு துண்டாக வெட்டி ஏழு தடவைகள் நீரில் கழுவி அத்துண்டுகளையும் பொரித்த கடலைப்பருப்பையும் போட்டு 10-15 நிமிடங்கள் வேகவிட்டு இறக்கி சாதத்துடன் உண்ணவும்.

இதனால் உடல் குளிர்ச்சி அடையும். உஷ்ணம் குறையும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் குறையும். இதில் சேர்க்கப்படும் மஞ்சள் வாய்வகற்றியாகவும் கிருமிக் கொல்லியாகவும் செயற்படும். கடலைப் பருப்பில் புரதச்சத்து உள்ளது. வெங்காயம் இரத்தத்தை சுத்திகரிக்கக்கூடியது.

கொத்துமல்லிக் கீரையில் உயிர்ச்சத்து "C" யும் நெய்யில் உயிர்ச்சத்து "D" யும் காணப்படுகிறது. கறிவேப்பிலை செரிப்பை (சமிபாட்டை) உண்டாக்கும். தக்காளி எதிர் ஒட்சியேற்ற மூலியாகும்.

கற்றாழை (நீரில் கழுவியது), சீரகம், கர்க்கண்டு சேர்த்து சாப்பிட்டு வந்தால் வயிற்று எரிவு தணியும்.

### மென்பானம் கற்றாழை யூஸ்:

சோற்றுக்கற்றாழை மடல்-5
தயிர் - 1 லீற்றர்
தேசிக்காய் - 2
சீனி - 500 கிராம்
உப்பு - சிறிதளவு

கற்றாழை மடல் விளிம்பில் உள்ள இரு புறமும் உள்ள முட்களை நீக்கி தோல் சீவி உள்ளிருக்கும் Gel போன்ற சோற்றை சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஏழு தரம் நீரில் கழுவி ஒரு பாத்திரத்தில் கற்றாழைத் துண்டுகள், எலுமிச்சம்பழரசம், சீனி, தயிர், உப்பு ஆகியவற்றை போட்டு நன்றாகக் கலக்கி பின்னர் Grinder இல் அடித்து வடித்து பரிமாறலாம். உடலிற்கு குளிர்ச்சியை கொடுப்பதோடு நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச் செய்யும். மூல நோய், வயிற்றுப்புண் உள்ளவர்களுக்கு சிறந்த மென்பானமாகும்.

சோற்றுக்கற்றாழைப் பூப் பொரியல் பொதுவாக கற்றாழை வெப்பத்தை தாங்கி வளரும் தன்மையுள்ளது. மழை அதிகமாகப் பெய்யும் புரட்டாதி மாதத்திலிருந்து மார்கழி மாதம் வரை பூக்களை செடியில் காணலாம்.

கற்றாழை பூவிற்கு காய கற்ப தன்மையுண்டு. உடலிற்கு குளிர்ச்சியையும் பலத்தையும் கொடுக்கக் கூடியது. விசத்தை முறிக்கும் தன்மையுண்டு. வயிற்றுப்புண் மூலரோகத்திற்கும் மிகவும் சிறந்தது.

### க-ற்றாழைப் பூப்பொரியல்

கற்றாழைப் பொடியிலிருந்து பூக்களை உருவி எடுத்துக் கொள்ளவும். கசப்பாக இருக்காது. பூக்களை பச்சையாகவும் சாப்பிடலாம். புளிப்பும், இனிப்பும் கலந்த சுவையாக இருக்கும். பூக்களை உருவி நன்றாக கழுவி சேகரித்து வைத்துக் கொள்ளவும்.

நல்லெண்ணெய் தேவையான அளவு
1/2 தேக்கரண்டி கடுகு
1/2 தேக்கரண்டி உளுத்தம்பருப்பு
1/2 தேக்கரண்டி கடலைப்பருப்பு
கறிவேப்பிலை தேவையான அளவு பெரிய வெங்காயம் சிறிதாக அரிந்தது -1கப்
உப்பு தேவையான அளவு
இஞ்சி, வெள்ளைப் பூடு அரைத்து விழுதாக வைத்துக்கொள்ளவும்.
பச்சை மிளகாய் -2
1/2 தேக்கரண்டி மிளகாய்த்தூள்
மஞ்சள் தூள் தேவையான அளவு

நல்லெண்ணையை காய வைத்து கடுகு, உளுத்தம் பருப்பு கடலைப் பருப்பு போட்டு வேக விட்டு வெங்காயம், உப்பு, இஞ்சி, உள்ளி விழுதையும் சேர்த்து நன்றாக வெந்ததும் பச்சை மிளகாயை வெட்டிப் போட்டு கற்றாழைப் பூக்களையும் போட்டு மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் சேர்த்து சிறிதளவு தண்ணீர் விட்டு வதக்கி சிறிது நேரம் மூடி விடவும். வெந்ததும் இறக்கி தனியாகவும் சாப்பிடலாம். சோற்றுடன் சேர்த்தும் சாப்பிடலாம். மிகுந்த பயனைக் கொடுக்கும். எமது பிரதேசத்திற்கு உகந்த ஆரோக்கியமான உப உணவாகவும் அமையும்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி மன்னாரில் நாளை மறுதினம் கவனயீர்ப்பு பேரணி

## அனைவரையும் ஒன்று கூடுமாறு அழைப்பு

(மன்னார்)

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடமாகாணத்தில் உள்ள அரசியல் கைதிகளின் குடும்பங்கள், மனித உரிமை செயற்பாட்டார்கள் மற்றும் பெண்கள் ஒன்றிணைந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மன்னாரில் கவனயீர்ப்புப் பேரணி ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

வடமாகாண அரசியல் கைதிகளின் உறவுகள் மற்றும் போராட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இந்த பேரணி தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறும். இப் போராட்டமானது மன்னார் நகர சபைக்கு முன்பாக ஆரம்பித்து மன்னார் மாவட்டச் செயலகத் திற்கு முன் ஒன்று கூடலுடன் நிறைவு பெறும்.

இலங்கையில் பெண்கள் பல வழிகளில் பாதிக்கப்படுவதுடன் மிகவும் கடினமான வகையில் சமூகத்தில் தள்ளப்படுகின்றார்கள்.

குறிப்பாக யுத்தத்தின் பின்னரான சூழலில் பெண்கள் அரசியல் ரீதியாகவும், சமுக ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றார்கள்.

குறிப்பாக அரசியல் கைதிகளாக கைது செய்யப்பட்டு ஆண்டாண்டு காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆண்கள். அவர்களது நெடுங்கால தடுத்து வைப்பினால் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் அவர்களது குடும்பத்தவர்கள்.

குறிப்பாக குடும்பத்தினை தலைமை தாங்கும் பெண்கள் பல இன்னல்களுக்கும் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

இந் நிலையில் சிறையில் நீண்ட காலம் வாடும் இவர்களது குடும்ப உறுப்பினர்களினது விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். ஆகவே மகளிர் தினத்தை முன்னிட்டு சிறையில் வாடும் அரசியல் கைதிகளினது விடுதலைக்காக குரல் கொடுப்பவர்களும், பெண்கள் உரிமைக்காக குரல் கொடுப்பவர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும், பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து ஓர் கவனயீர்ப்பை செய்து அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு ஓர் அணியாக செயற்பட அனைவரையும் அழைக்கின்றோம் என குறித்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-285)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய சூழலில் சிரமதானத்தில் ஈடுபட்ட இராணுவத்தினர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய சூழலில் 59 ஆவது படைப்பிரிவால் மாபெரும் சிரமதானப் பணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பங்குனி திங்கள் உற்சவம் நெருங்கி வரும் நிலையில் ஆலயச் சூழல் சுத்தபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்த நிலையில் தனியார் நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் முல்லைத்தீவு 59 ஆவது படைப்பிரிவை சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட படையினர் இணைந்து இந்த சிரம்தானத்தில் ஈடுபட்டனர். (9)





# இராணுவ வாகனம் மோதி ஒருவர் காயம்

(கண்டாளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உடபட்ட பளை பகுதியில் நேற்று காலை இராணுவ வாகனம் ஒன்றுடன் .ஹயஸ் வாகனம் மோதியதில் வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பியவர் ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பிய நபர் ஒருவர் கொழும்பிலிருந்து பேருந்து ஒன்றில் பயணித்து பளை பகுதியில் இறங்கி ஹயஸ் வாகனம் ஒன்றில் வீடு செல் வதற்காக ஏறியுள்ளார்.

அவரை ஏற்றியவுடன் சடுதியாக வீதியில் திருப்பிய ஹயஸ் வாகனம் மீது இரா ணுவத்தினரை ஏற்றிச் சென்ற பேருந்து மோதியுள்ளது.

பலாலியிலிருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த பேருந்தே ஹயஸ் மீது மோதியுள்ளது.சம்பவத்தின் போது வெளிநாட்டி லிருந்து தாயகம் திரும்பிய ஒருவர் காயம் அடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணையை பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-315)




# வன்னேரிக்குளத்தில் படரும் நீர்த் தாவரங்களால் நன்னீர் மீன்பிடி,விவசாயம் பாதிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் படரும் நீர்த்தாவரங்களினால் குளத்தின் நீர் மிக வேகமாக குறைவடைந்து வருவ தாகவும் இத்தாவரங்களை அகற்றித் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற வன்னேரிக் குளத்தின் கீழ் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் காலபோகத்திலும் சிறுபோகத்திலும் பயிர் செய்கை மேற்கொண்டுவருகின்றனர். இவ்வாண்டு 183 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக மேற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இவ்வாறு இக்குளத்தின் கீழ் இருபோக பயிர்ச் செய்கை மேற்கொள்வதுடன், நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்கள் இக்குளத்தின் கீழான மீன்பிடியை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் வன்னேரிக் குளத்தின் நீரேந்து பிரதேசத்தில் ஒரு வகையான நீர்த்தாவரம் படர்ந்துள்ளதால் குளத்தின் நீரும் குறைவடைந்து வருகின்றது. இந்தக் குளத்தில் படருகின்ற நீர்தாவரத்தை அகற்றித் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறு குளத்தினுள் தாவரங்கள் படர்வதனால் நன்னீர் மீன்பிடி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (9-315)

## ஐ றோட் திட்டத்தின் கீழ்
# கிளிநொச்சி மாவட்டத்தில் 47 வீதிகள் புனரமைப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 181.78 கிலோ மீற்றரில் 47 வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மூன்று தொகுதிகளாக பிரிக்கப்பட்டு வீதிகள் புனரமைக்கப்படவுள்ளது. அந்த வகையில் முதல் கட்டமாக கரைச்சியில் வன்னேரிக்குளம் வீதி, செம்பியன் பற்று பாலாவி கிராஞ்சி வீதி, வன்னேரிக்குளம் பல்லவராயன் வீதி, வேரவில் வலைப்பாடு வீதி, வீரபாண்டியன் வீதி, அக்கராயன் குளம் எல்.பி பிரதான வாய்க்கால் வீதி, வன்னேரிக்குளம் ஜெயபுரம் வீதி, பூநகரியில் ஆனைக்கட்டி வீதி, வெட்டுக்காடு வீதி, செக்காலை முட்கொம்பன் வீதி ஆகிய 60.31 கிலோ மீற்றர் வீதிகளும்,

இரண்டாம் கட்டமாக முறிகண்டி அக்கராயன்குளம் வன்னேரி வீதி, ரெயிலர் வீதி, முறிகண்டி கனகபுரம் வீதி, றோஸ் வீதி, புதுமுறிப்பு கோணாவில் வீதி, கோணாவில் ஸ்கந்தபுரம் வீதி, அம்பாள்குளம் மத்திய வீதி, கோணாவில் யூனியன்குளம் வீதி, திருக்குடும்ப கன்னியர்மட வீதி, கனகபுரம் வீதி, திருநகர் கனகபுரம் வீதி, குமாரசாமி வீதி, உள்ளிட்ட 53.60 கிலோ மீற்றர் வீதிகளும்,மூன்றாம் கட்டமாக கண்டாவளை புண்ணைநீராவி வீதி, இராமநாதபுரம் தர்மபுரம் வீதி, குமரபுரம் வீதி, உப்புக்குளம் வீதி, புண்ணைநீராவி பிரமந்தனாறு வீதி, நாகதம்பிரான் கோவில் கலவெட்டித்திடல் வீதி, வட்டக்கச்சி அழகரட்ணம் வீதி, கட்சன் வீதி 1, கட்சன் வீதி 2, சில்வா வீதி, ஆறுமுகம் வீதி, சிவசுந்தரம் வீதி, புலோப்பளை அல்லிப்பளை வீதி, மாசார் வீதி, சின்னத்தாளையடி வீதி உள்ளிட்ட 67.87 கிலோ மீற்றர் வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளது என இவ் வீதி புனரமைப்பு பணிகளின் ஆரம்ப கட்ட வேலைகள் தொடங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-350)

# கத்தி முனையில் அச்சுறுத்தி மாணவர்களிடம் சைக்கிள் பறிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சியில் கடந்த வாரம் இரண்டு மாணவர்களிடம் கத்தியை காட்டி அவர்களது துவிச்சக்கர வண்டிகளை கொள்ளையடித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.


ஒரே பாணியில் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் இருந்து கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும், கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்திற்கு சென்ற மாணவர்களிடமே துவிச்சக்கரவண்டிகள் கொள்ளையடிக்கபட்டுள்ளன.

காலை் பாடசாலைக்கு சென்றுக் கொண்டிருந்த மாணவர்களிடம் தங்களையும் அவசரமாக ஏற்றிச் செல்லுமாறு கனகபுரம் டிப்போ வீதியில் நடந்து சென்ற இளைஞர் ஒருவர் கோரியுள்ளார் இரக்கப்பட்ட மாண வன் குறித்த இளைஞனை ஏற்றிச் சென்றுக்கொண்டிருந்த போது இடையில் குறித்த இளைஞன் தான் ஒடுவதாக தெரிவித்து மாணவனிடமிருந்து துவிச்சக்கர வண்டியை பெற்று ஓடிக் கொண்டிருந்த போது கனகபுரம் பாடசாலையின் பின் வீதியில் வைத்து மாணவனின் கழுத்தில் கத்தியை வைத்து சத்தமிட்டால் வெட்டிவிடுவேன் இறங்கி ஓடிவிடு என அச்சுறுத்திவிட்டு துவிச்சக்கர வண்டியை பறித்துச் சென்றுள்ளார்.இவ்வாறு இந்துக் கல்லூரிக்குச் சென்று கொண்டிந்த மாணவ னிடம் தனது முச்சக்கர வண்டி கடையில் திருத்த விட்டுள்ளேன். அதுவரை கொண்டு சென்று விடுமாறு இளைஞன் ஒருவர் கோரியுள்ளார்.

மாணவனும் இளை ஞனை ஏற்றுவதற்காக இறங்கிய போது சடுதியாக கத்தியை எடுத்து காட்டிய இளைஞன் மாணவனை அச்சுறுத்திவிட்டு துவிச்சக்கர வண்டியை பறித்து சென்றுள்ளான்.

இவ்விரு சம்பவங்களிலும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்திலிருந்து பல கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருந்து பாடசாலைக்கு வரும் வறிய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (9-350)

# கடலுணவு உணவகத்துக்கான அடிக்கல் நாட்டிவைப்பு



(முல்லைத்தீவு)

ஐக்கிய இராஜ்ஜிய அரசின் நிதி உதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையில் கடலுணவு உணவகத்துக்கான அடிக்கல் நேற்று நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

5 மில்லியன் ரூபா செலவில் முல்லைத்தீவு கொக்கிளாய் வீதியின் ஆரம்பத்தில் இந்த கடலுணவு உணவகம் அமைக்கப்படவுள்ளது.

ஐக்கிய இராஜ்ஜிய அரசின் நிதி உதவியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் பெண்கள் வாழ்வாதார மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கோடு இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.


இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் ஐக்கிய இராஜ்ஜிய உயர்ஸ்தானிகராலயத்தின் நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9)

# கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் புதுமுறிப்புக்குள நன்னீர் மீன்பிடித்திட்டம்

## செயற்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி புதுமுறிப்புக்குளத்தின்கீழ் பல மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நன்னீர் மீன்பிடித் திட்டம் இது வரை நடைமுறைப்படுத்தப்படாமல் கைவிடப்பட்டு காணப்படுகின்றது என்றும் இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.



கிளிநொச்சி முதுமுறிப்புக்குளத்தின் கீழ் சேவாலங்கா நிறுவனத்தினால் பல ஏக்கர் காணி துப்புரவு செய்யப்பட்டு நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்திற்கான கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் எந்தவித பயன்பாடுகளுமின்றி கைவிடப்பட்ட நிலையில் பற்றைகள் மூடி காணப்படுகின்றது.

இந்தப்பிரதேசத்தைச்சேர்ந்த பெருமளவானோர் தொழில் வாய்ப்பின்றியும் வாழ்வாதாரங்கள் இன்றியும் வாழ்ந்து வருகின்றமையைக் காரணம் காட்டி குறித்த செயற்றிட்டம் ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதனுடைய இலக்கு எட்டப்படாமல் எந்தவித பயன்பாடுமின்றியும் காணப்படுவது தொடர்பில் இப் பிரதேசத்தைச் சேர்ந்த நன்னீர் மீன்பிடித்தொழிலாளர்களும் பிரதேச மக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இதனை நடைமுறைப்படுத்துவதற்கும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்ற வகையில் இதனைச் செயற்படுத்த வேண்டும் எனப்பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)




# பெண்களுக்கான தலைமைத்துவ பயிற்சி




(கிளிநொச்சி)

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் கடந்த பெப்ரவரி மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் பெண்களுக்கான தலைமைத்துவ பயிற்சி ஒன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒப்டெக் நிறுவன வளாகத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வானது பணியக இயக்குநர் மற்றும் இணை இயக்குநரின் வழிகாட்டலுடன், பணியக இணைப்பாளர்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பெண்களுக்கான தலைமைத்துவ விருத்தி, தற்காலத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதனை எதிர்கொள்வதற்கான மனோநிலை மற்றும் தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள், பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய சமூகப் பொருளாதார அபிவிருத்தி பற்றிய பயிற்சிகள் நவீன தொழில் நுட்ப வசதிகளுடனும் குழு நிலை சார் விளையாட்டுக்கள் மூலமும் வளவாளர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சி நெறியில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த ஆர்வமிக்க யுவதிகள் கலந்து கொண்டிருந்தனர். தலைமைத்துவப் பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (9)



**கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் சமாதான நீதவான்களுக்கான கௌரவிப்பு விழா வன்னேரிக்குளம் கிராம உத்தியோகத்தர் ப.சபாரட்ணம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வன்னேரிக்களத்தில் நடைபெற்றது.**

**(படம்:-அக்கராயன் செய்தியாளர்)**



முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் அலுவலகம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் பதவி வகித்துவரும் நிலையில் அவருக்கான அலுவலகம் ஒன்று இல்லாத நிலை காணப்பட்டது. இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் உள்ள சேதமடைந்த கட்டடம் ஒன்று புனரமைக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(படம்:அக்கராயன் செய்தியாளர்)

# மின்சாரம் தொடர்பான விழிப்புணர்வு

(நெளுக்குளம்)

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மின்சாரம் தொடர்பான கருத்தாடல் நிகழ்வு வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.



இதன்போது மின்சாரப் பாதுகாப்பு, மின்சாரப் பொருளாதாரம் மற்றும் மின்சார தொழில்நுட்பம் ஆகிய மூன்று துறைகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கை பொது பயன்பாட்டின் முன்னேற்றாட்டின் அடிப்படையில் அமைச்சரவையின் தீர்மானத்துக்கு ஏற்றவாறு மின்னியலாளர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த திட்டம் வருகின்ற மாதத்திலிருந்து நடைமுறைப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் முக்கிய காரணம் மின்சாரத் தாக்கத்தினால் ஏற்படும் மரணத்தினை குறைப்பதன் முகமாகவே இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவானது இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மின்சாரத்தைப் பாவிக்கும் சொக்கற்ஸ் பிளக்குகளுக்கு ஒரு ஸ்ராண்ட் ஒன்றினை கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் வட்டவடிவிலான அவற்றை இல்லாது செய்து சதுரவடிவிலான பிளக்குகளை கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்மூலம் மின்சார வீண் விரயத்தை தவிர்க்க முடியுமென அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் எஸ்.சமன் பந்துலசேன, பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், தேசிய தொழிற் பயிற்சி அதிகாரசபை மாணவர்கள், மின் பொறியியலாளர்கள், மின் துறை சார்ந்த பலரும் குறித்த கருத்தாடல் நிகழ்வில் கலந்து கொண்டனர். (9-299)




# பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்து; 25 பேர் பலி, 62 பேர் படுகாயம்

(கேப்டவுண்)


தென்னாபிரிக்கா நாட்டில் பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 25 பேர் உயிரிழந்தனர்.

தென்னாபிரிக்கா நாட்டின் கிழக்கு கேப் மாகாணம் பட்டர் ஒர்த் நகரில் இருந்து ஹிபி என்ற நகருக்கு 80 இற்கும் அதிகமான பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் பேருந்து சென்றது.

குவால்வினி என்ற மலைப் பாங்கான கிராமத்தை கடந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து எதிர்பாராத விதமாக பள்ளத்தாக்கில் செங்குத்தாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தக்கோர விபத்தில் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் 25 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 62 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புப்



படையினர் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். (ஐ-2)

## உலகை உயிரி

(பீஜிங்)

கொவிட் 19 தொற்றினால் உலகளாவிய ரீதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 3.115 ஆக உயர்ந்துள்ளது.

சீனாவின் தேசிய சுகாதார ஆணை

# கையொப்பமிட்ட மை காய்வதற்குள் ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்துவோம்

(காபூல்)

அமெரிக்கா மற்றும் தலிபான் இடையேயான அமைதி ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மை காய்வதற்குள் ஆப்கானிஸ்தான் அரச படைகள் மீது தாக்குதல் நடத்துவோம் என தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் பெரு முயற்சியால் மத்திய கிழக்கு நாடான கட்டார் தலைநகர் டோஹாவில் கடந்த 29 ஆம் திகதி போர் நிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

இதன்போது, அடுத்த 14 மாதங்களில் அமெரிக்கா தனது படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து விலக்கிக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

அமெரிக்காவின் இந்த சமரச ஏற்பாட்டின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தான் அரசால் கைது செய்யப்பட்டு, சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 5 ஆயிரம் தலிபான் கைதிகளை விடுதலை செய்யும் பொறுப்பை அமெரிக்க அரசு ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தலிபான் பயங்கர



வாதிகளை விடுதலை செய்ய மாட்டோம் என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானி தெரிவித்தார்.

இந்நிலையில், போர் நிறுத்த உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மையின் ஈரம் காய்வதற்குள் ஆப்கானிஸ்தான் அரசுப் படைகள் மீது தாக்குதல் நடத்துவோம் என தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக தலிபான் செய்தி தொடர்பாளர்களில் ஒருவரான ஜபியுல்லாஹ் முஜாஹித் கூறுகையில், "வன்முறை குறைப்பு தற்போதுடன் முடிவுக்கு வருகிறது. எங்களது நடவடிக்கைகள் வழக்கம்போல் தொடரும்.

ஒப்பந்தத்தின்படி, எங்களது வீரர்கள் வெளிநாட்டுப் படையினரின் மீது தாக்குதல் நடத்த மாட்டார்கள். ஆனால், காபூல் அரசின் நிர்வாகத்தில் உள்ள படையினர் மீது எங்களது தாக்குதல் தொடரும்" என தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் கடந்த 2001 ஆம் ஆண்டில் இருந்து அரசுப் படைகள் மற்றும் தலிபான்கள் இடையில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# சட்டவிரோத நுழைவு அகதிகள் - படையினர் மோதல்





(ஏதென்ஸ்)

சிரிய போரால் துருக்கியில் இருந்து கிரீஸ் எல்லை வழியாக ஐரோப்பாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய ஆயிரக்கணக்கான அகதிகள் முயற்சி செய்து வருவதால் இரு நாட்டு எல்லையில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகவும் முக்கிய இடமான இட்லிப் மாகாணத்தை கைப்பற்ற அரசுப்படைகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் மீதும் ரஷ்யா உதவியுடன் சிரியா இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால், கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது.

இதற்கிடையில், இட்லிப் மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை ரஷ்யா - சிரியப் படைகள் நடத்திய வான்வெளித் தாக்குதலில் 33 துருக்கி இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு துருக்கி நடத்திய பதிலடி தாக்குதலில் 30 இற்கும் அதிகமான சிரிய இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இதனால் சிரியாவின் ஆதரவு நாடான ரஷ்யாவுக்கும்-துருக்கிக்கும் இடையே போர் மூளும் சூழல் உருவாகியுள்ளது.

இந்தப் போர் பதற்றத்தால் சிரியாவின் இட்லிப் பகுதியில் வசித்துவந்த ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியே அகதிகளாக துருக்கி நாட்டிற்குள் நுழையத் தொடங்கியுள்ளனர்.

துருக்கியில் ஏற்கனவே சுமார் 35 இலட்சம் பேர் அகதிகளாக உள்ளனர். தற்போது நிலவி வரும் போர் பதற்றத்தால் சிரியாவில் இருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. முன்னதாக ரஷ்ய வான்வெளி தாக்குதலில் தங்கள் வீரர்கள் கொல்லப்பட்ட விவகாரம் குறித்து அவசரமாக ஆலோசனை நடத்த துருக்கி நேட்டோவிடம் வேண்டுகோள் விடுத்தது.

இதையடுத்து நடைபெற்ற நேட்டோ ஆலோசனைக் கூட்டத்தில் உயிரிழந்த துருக்கி வீரர்களுக்கு இரங்கல் மட்டுமே தெரிவிக்கப்பட்டது. ரஷ்ய படைகளை எதிர்த்து சண்டையிட எந்தவித ஆர்வமும் காட்டவில்லை.

நேட்டோவின் செயலால் ஆத்திரமடைந்த துருக்கி தங்கள் நாட்டில் அகதிகளாக உள்ள மக்களை ஐரோப்பிய நாட்டிற்குள் அனுப்ப முடிவு செய்துள்ளது.

பாதுகாப்பு படையினர் மீது கண்ணீர்ப்புகை குண்டு வீசும் அகதிகள் இதற்காக துருக்கியையும் ஐரோப்பாவையும் இணைக்கும் இடமாக உள்ள துருக்கி-கிரீஸ் எல்லையை திறந்து வைத்துள்ளது. இதனால் சிரிய அகதிகள் மட்டுமல்லாமல் துருக்கியைச் சேர்ந்த ஆயிரக்காணக்கானவர்களும் கிரீஸ் எல்லை நோக்கி பயணம் செய்து வருகின்றனர்.

ஐரோப்பாவுக்குள் எப்படியாவது நுழைந்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு எல்லையை முற்றுகையிட்டுள்ள அகதிகளை கிரீஸ் அதிகாரிகள் எல்லையிலேயே தடுத்து நிறுத்தினர். கடல் வழியாகவும் கிரீஸ் எல்லைக்குள் அகதிகள் சட்ட விரோதமாக செல்ல முயற்சி செய்து வருகின்றனர். ஆனாலும், சில அகதிகள் அத்துமீறி வேலிகளைத் தாண்டி சட்ட விரோதமாக ஐரோப்பிய எல்லைக்குள் நுழைந்து வருகின்றனர்.

இந்நிலையில் துருக்கி-கிரீஸ் எல்லையில் தஞ்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கான அகதிகள் ஐரோப்பாவுக்குள் இன்று மீண்டும் சட்டவிரோதமாக நுழைய முயற்சி செய்தனர். இந்த ஊடுருவலை பாதுகாப்பு படையினர் தடுக்க முற்பட்டனர்.

இதனால் அகதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் மோதல் வெடித்தது. இந்த மோதலின் போது பாதுகாப்பு படையினர் மீது அகதிகள் கற்களையும் கண்ணீர்ப்புகை குண்டுகளையும் வீசித் தாக்குதலில் ஈடுபட்டனர்.

ஐரோப்பிய எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழையும் அகதிகள் இந்தத் தாக்குதலுக்கு கிரீஸ் பாதுகாப்பு படையினரும் பதிலடி தாக்குதல் நடத்தினர். கடல் வழியாகவும் ஐரோப்பாவுக் குள் அகதிகள் நுழைய முயற்சி செய்து வருவதால் கிரீஸ் கடல் எல்லையிலும் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயற்சி செய்யும் அகதிகளுக்கும் பாதுகாப்பு படையிருக்கும் இடையே மோதல் நடைபெற்று வருவதால் துருக்கி-கிரீஸ் எல்லையில் பர பரப்பான சூழல் நிலவி வருகிறது. (ஐ-2)



# வெளிநாடு



# கை அச்சுறுத்தும் கொரோனா
# ரிழப்பு 3115ஆக அதிகரிப்பு

ளாவிய
னிக்கை

ஆணை

யகத்தின் நேற்றைய அறிக்கையின்படி கொவிட் 19 தொற்று உருவாகிய சீனாவின் ஹூபே மாகாணத்தில் 31 உயிரிழப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது ஒரு வாரத்தில் சீனாவின் பதிவுசெய்யப்பட்ட மிகக் குறைந்த உயிரிழப்பாக கருதப்படுகின்றது.

சீனாவின் பிரதான நிலப்பரப்பில் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த நோய் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இப்போது 80.151 ஆக உள்ள நிலையில், உலகளாவிய ரீதியில் 90.506 பேர் இந்நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

தற்போதைய நிலவரப்படி சீனாவின் பிரதான நிலப்பரப்புகளில் மொத்தமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையானது 2.943 ஆக உயர்வடைந்துள்ளது. இது தவிர சீனாவின் பிரதான நிலப் பரப்புகளுக்கு வெளியே 70 நாடுகளில் கொவிட் 19 தொற்று பரவியுள்ளதோடு 172 உயிரிழப்பு சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (ஜ-2)

ட்டோம் என
ஷ்ரப் கானி

டன்படிக்கை
காய்வதற்குள்
மீது தாக்குதல்
வித்துள்ளனர்.
ய்தி தொடர்
ஹ் முஜாஹித்
தற்போதுடன்
வடிக்கைகள்

ரர்கள் வெளி
குதல் நடத்த
ரசின் நிர்வா
து எங்களது
தெரிவித்துள்

த 2001 ஆம்
கள் மற்றும்
ட்டுப் போர்
த்தக்கது. (ஜ-2)

## தல்

ம் என்ற
லையை
ள கிரீஸ்
த்து நிறுத்
லைக்குள்
ல முயற்சி
லும், சில
த் தாண்டி
லைக்குள்

ல்லையில்
ணக்கான
மீண்டும்
செய்தனர்.
டையினர்

பாதுகாப்பு
தது. இந்த
யினர் மீது
னீர்ப்புகை
தலில் ஈடு

விரோதமாக
க்குதலுக்கு
ம் பதிலடி
ழியாகவும்
ய முயற்சி
லையிலும்

வுக்குள்
திகளுக்கும்
ய மோதல்
க்கி-கிரீஸ்
ல் நிலவி
(ஜ-2)

# படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ரோஹிஞ்யா அகதிகள் 7 பேர் உயிரிழப்பு!



பங்களாதேஷில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ரோஹிஞ்யா அகதிகள் 7 பேர் கொல்லப்பட்டனர்.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினே மாநிலத்தில் சிறுபான்மை ரோஹிஞ்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வந்தனர்.

பங்களாதேஷ் நாட்டில் இருந்து குடிபெயர்ந்த இவர்களில் சிலர், கடந்த 2012 இல் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு எதிராக மியன்மார் இராணுவத்தினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மியன்மாரில் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கியது முதல் உயிருக்கு அஞ்சி சுமார் 3.70 இலட்சத்துக்கும் அதிகமான ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி அயல் நாடான பங்களாதேஷில் அகதிகளாக தஞ்சம் அடைந்தனர். இவர்கள் பங்களாதேஷில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இதற்கிடையில், பங்களாதேஷில் இருந்து கடல் வழியாக மலேசியா செல்ல பல ரோஹிஞ்யா அகதிகள் முயற்சி செய்து வருகின்றனர். மேலும் சில அகதிகள் போதைப்பொருள் கடத்தல் குற்றங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் ஹாக்ஸ் பசார் என்ற நகரின் ஜாமிமொரா மோசோனி என்ற பகுதியில் ரோஹிஞ்யா அகதிகள் முகாம் ஒன்று அமைந்துள்ளது. அந்த முகாம் அருகே போதைப் பொருள் கடத்தல், ஆள் கடத்தல், கொள்ளை போன்ற குற்றங்களில் ஈடுபட்ட கும்பல் இருப்பதாக அந்நாட்டு அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அப்பகுதியில் அதிரடிப்படையினர் தீவிர தேடுதல் நடத்தினர். இதன்போது அங்கு பதுங்கியிருந்த கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் ரோஹிஞ்யா அகதிகள் சிலர் பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால் பொலிஸாருக்கும் கடத்தல் கும்பலுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச்சூடு நடைபெற்றது.

இரு தரப்பினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சமரில், கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்பட்ட ரோஹிஞ்யா அகதிகள் 7 பேர் அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களிடமிருந்து பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-2)

# அசுர வேகத்தில் பரவும் கொரோனா தொற்று



(இத்தாலி)

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று, தற்போது ஐரோப்பாவிலும் அசுர வேகத்தில் பரவி வருகின்றது.

ஐரோப்பாவை பொறுத்தவரை வேறு எங்கும் இல்லாத அளவு, இத்தாலியில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகமாக உள்ளது.

இதன்படி இத்தாலியில் 1,694 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் முப்பத்து நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். இதனை இத்தாலியின் சிவில் பாதுகாப்பு ஆணையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தாலியை அடுத்து, பிரான்ஸில் 130 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். புதிததாக செக் குடியரசு, ஸ்கொட்லாந்து மற்றும் டொமினிகன் குடியரசு ஆகிய நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஜ-2)

# பதவியேற்ற ஒரு மாதத்தில் ஈராக் பிரதமர் ராஜினாமா



(ஈராக்)

பாராளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் போதுமான ஆதரவு கிடைக்காததால், முகமது தவுபிக் அலாவி பதவி விலகி விட்டதாகவும் இது தொடர்பாக ஜனாதிபதி பர்ஹாம் சாலிக்கு அவர் இராஜினாமா கடிதம் அனுப்பியுள்ளார்.

ஈராக்கில் ஊழல் மற்றும் வேலையின்மை அதிகரித்து வருவதை கண்டித்து, பிரதமர் அப்துல் மஹ்திக்கு எதிராக கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். நாள் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கியதால், அரசு இரும்புக் கரம் கொண்டு போராட்டத்தை ஒடுக்கியது. பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்களால் சுமார் 400 போராட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆனாலும் மக்களின் போராட்டம் ஓயாமல், நாளுக்குநாள் மேலும் தீவிரமடையத்தொடங்கியது. இதனால் நவம்பர் மாத இறுதியில் பிரதமர் பதவியை அப்துல் மஹ்தி இராஜினாமா செய்தார். அதன் பிறகு ஈராக்கின் புதிய பிரதமராக முன்னாள் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் முகமது தவுபிக் அலாவியை, கடந்த மாதம் ஜனாதிபதி பர்ஹாம் சாலி நியமித்தார். பிரதமராக பொறுப்பேற்ற உடனேயே, போராட்டக்காரர்களின் உயிரிழப்புக்கு காரணமானவர்களை தண்டிப்பேன் என்றும் ஊழலை எதிர்த்து போராடுவேன் என்றும் முகமது தவ்பிக் அலாவி உறுதியளித்தார். ஆனால் அவரை பிரதமராக நியமித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டத்தை தொடர்ந்தனர்.

இந்த நிலையில் புதிய அமைச்சரவை அமைப்பது தொடர்பான நம்பிக்கை வாக்கெடுப்பு கடந்த மாதம் 24 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டு, பின்னர் தள்ளிவைக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் போதுமான ஆதரவு கிடைக்காததால், முகமது தவுபிக் அலாவி பதவி விலகி விட்டதாகவும் இது தொடர்பாக ஜனாதிபதி பர்ஹாம் சாலிக்கு அவர் இராஜினாமா கடிதம் அனுப்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-2)

# சஜித் தலைமையிலான கூட்டணி ஆளும் கட்சிக்கு பெரும் சவால்

## ஹக்கீம் சுட்டிக்காட்டு



(சென்னை)

ஜனாதிபதி வேட்பாளராக களம் கண்ட சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் தொடர்ந்து நாங்கள் களம் காண்கின்றோம். இக்கூட்டணி ஆளும் கட்சிக்கு பெரும் சவாலாக இருக்கும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்ராலின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் 02 இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது, சென்னை விமான நிலையத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் ஆசாத், மாவட்ட சிறுபான்மை இணைச் செயலாளர் இப்ராஹிம் கனி, திருச்சி ஊடகவியலாளர் எம்.கே. ஷாகுல் ஹமீது ஆகியோர்கள் ரவூப் ஹக்கீமுக்கு பொன்னாடை போர்த்தி விமான நிலையத்தில் வரவேற்பளித்தனர்.

அங்கு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு,

**கேள்வி:** இந்திய குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான போராட்டம் குறித்த உங்களது நிலைப்பாடு என்ன?

**பதில்:** இந்தியாவில் குடியுரிமைச் சட்டம் குறித்த போராட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்தப் போராட்டம் மிகவும் கவலைக்குரியது. இந்தப் போராட்டம்வெற்றி பெற வேண்டும். இந்தச் சட்டமூலம் தொடர்பாக தொப்புள்கொடி உறவுகளான இலங்கையில் வாழ் மக்களாகிய நாங்களும்கவலை கொள்கிறோம்.

**கேள்வி:** தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது குறித்து என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** ஒட்டுமொத்தமாக தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது பிழையான தகவல். உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளில் சிங்கள மொழியில் பாடுவதுடன் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடுவதை முன்னைய அரசாங்கத்தில் நாங்கள் வழமையாகக் கொண்டிருந்தோம். அந்த வழமையை தற்போதைய அரசாங்கம் மாற்றி, சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் பாட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. நல்லிணக்கம் காரணமாக கொண்டுவரப்பட்ட அந்த வழமை தற்போது மாற்றப்பட்டுள்ளதால், அது தமிழர்களின் மனதை புண்படுத்தியுள்ளது.

**கேள்வி:** இலங்கையில் போர்க்குற்றம் தொடர்பாக இது வரை விசாரணை நடைபெறவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கவலை தெரிவித்துள்ளார். இனியேனும் அந்த விசாரணை நடைபெறுமா?


**பதில்:** இலங்கையில் தற்போதுள்ள அரசு ஐக்கிய நாடுகள் சபையுடன் கூட்டாக நிறைவேற்றிய பிரேரணையில் இருந்து விலகுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இந்த நடவடிக்கை சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசு எடுத்து வரும் நல்லெண்ண நடவடிக்கைகளுக்கு பாரியபாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

இலங்கையில் நடைபெற்ற போரின்போது போர்க்குற்றங்கள் நடைபெற்றனவா? இல்லையா? என்பதில் சர்வதேச அரசியல் தலையீடு எதுவும் இருக்கக் கூடாது என்பது தற்போதைய ஆட்சியாளர்களின் நீண்டநாள் கொள்கையாக உள்ளது. எனவே, இது குறித்த சர்ச்சை சர்வதேச அளவில் இன்னும் விரிவடையும் வாய்ப்பிருக்கிறது.

**கேள்வி:** உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்களின் பாதுகாப்பில் பிரச்சினையை நிலவியதே? தற்போது அதன் நிலை என்ன?

**பதில்:** அந்தப் பதற்றம் தற்போது ஓரளவுக்கு தணிந்திருக்கிறது. இருந்தாலும் சில அரசியல்வாதிகள் வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து பொதுவெளியில் பேசிக்கொண்டிருப்பதால், அது மனங்களை வேறுபடுத்திக் கொண்டிருக்கிறது. இந்நிலை தொடராமலிருக்க வேண்டும் என்பதே எமது அவா என அவர் தெரிவித்தார். (ஐ-2)

# டெங்கு-வொல்பச்சிய பற்றீரியாக்களை பயன்படுத்தும் பரீட்சார்த்த முறை ஆரம்பம்



(நுகேகொடை)

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த வொல்பச்சியா பற்றீரியாக்களை உடைய கொசுக்களை பயன்படுத்தும் பரீட்சார்த்த நடைமுறைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


நுகேகொடை ஆனந்த சமரக்கோன் திறந்தவெளி அரங்கில் இந்த பரீட்சார்த்த முறை மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டம் இன்னும் மட்டக்குளி மற்றும் கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும். அதன் பின்னர் மற்றைய இடங்களுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சுடன் இணைந்து இத்திட்டத்தில் பங்கு பற்றுவதில் அவுஸ்திரேலியா மகிழ்ச்சியடைவதாக இந்தத் திட்டத்தின் போது உரையாற்றிய அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் டேவிட் ஹொல்பி தெரிவித்தார்.

வொல் பச்சியாமுறை 2011 இல் அவுஸ்திரேலியாவின் கெயார்ன்ஸ் நகரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை பெரும் வெற்றியளித்துள்ளது. அதன் பின் இங்கு டெங்கு பரவல் கட்டுப்படுத்தப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜயசிங்க குறிப்பிடுகையில் 1980 களில் இருந்து டெங்கு நோய் இலங்கையில் தீவிரமாகப் பரவி வருவதாகவும் , ஒவ்வொரு ஆண்டும் டெங்கு நோயின் வீரியம் அதிகரித்து வருவதாகவும், எனினும் மரண விகிதம் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ-2)

# 20 அடி பள்ளத்தில் ஆட்டோ



(பொகவந்தலாவ)

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ லெச்சுமி தோட்டம் மேற்பிரிவு பகுதியில் ஆட்டோ வண்டி ஒன்று விபத்துக்குள்ளாகியதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுக்காலை 05.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. ஹற்றனில் இருந்து பொகவந்தலாவ கிவ் தோட்டப் பகுதிக்குச் சென்ற ஆட்டோவே பொகவந்தலாவ டின்சின் பகுதியியை விட்டு விலகி சுமார் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

அதிக வேகம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் ஆட்டோவைச் செலுத்திய சாரதிக்கு பாதிப்புகள் இல்லாத போதும் ஆட்டோ கடும் சேதமானதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனநிறைவு

ஒரு ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்கனும் என்பது அவருடைய ஆசை. தானே அதற்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்று நினைத்தார். அரண்மனையைச் சுற்றி நிறைய மரங்களை நட்டு வளர்த்தார். இதைப் பார்த்து விட்டு மக்களும் அவர்கள் வீட்டைச் சுற்றி மரக்கன்றுகளை நட்டு வளர்த்தார்கள்.

கொஞ்ச காலத்திலே ஊர் முழுவதும் பசுமையா மாறிவிட்டது... எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தது.இது ஒரு பக்கம் இருக்கட்டும் இப்பொழுது நான் சொல்லப் போகின்ற கதை வேறு...அதாவது அந்த ராஜா ஒரு நாள் தன்னுடைய அரண்மனையை சுத்தியிருக்கின்ற விதவிதமான மரங்களை எல்லாம் போய்ப் பார்த்தார்கள். எப்படியிருக்கிறீர்கள் என்று ஒவ்வொரு மரத்திடமும் விசாரித் தார்.எந்த மரமும் சந்தோஷமா இருப்பதாக தெரியவில்லை.அது அதுக்கும் மனதிலே குறை!முதலிலே ஆலமரத்திடம் போனார்.அது சொல்லியது..

"மன்னா... நான் நன்றாக பெரிதாக வளர்ந்திருக்கின்றேன். அடர்த்தியாக இருக்கின்றேன்.கிளையெல்லாம் நான்கு பக்கமும் படர்ந்து தான் இருக்கின்றது.இருந்தாலும் என்ன பிரயோசனம். என்னுடைய பழம் மிகவும் சின்னதாக இருக்கே... என் கண்ணுக்கே சரியாக புலப்பட மாட்டேங்குதே...நான் இருக்கிற சைசுக்கு என் கிளையிலே இருக்கிற பழம் எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும். அது மிகச்சிறியதாக இருக்கிறது. எனக்கு பெரிய அவமானமாக இருக்கின்றது.இப்படி இருக்கிறதிற்கே கூச்சமாக இருக்கிறது. ஒரு நல்ல புயல் வந்தால் பேசாமல் சாஞ் சுடலாமான்னு பார்க்கின்றேன்!" அப்படி என்று புலம்புது ஆலமரம்.சரி இருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டு ராஜா அடுத்தபடியாகஒருஅத்திமரத்திற்கருகேபோனார்.அதுவும் புலம்ப ஆரம்பித்துவிட்டது.

"நான் கூட பெரிய மரம் தான்..இலை அழகாக இருக்கின்றது... பழம் அழகாயிருக்கின்றது.இருந்தாலும் உள்ளே விடயம் இல்லையே... "அத்திப்பழத்தைப் பிட்டுப் பார்த்தா...அத்தனையும் சொத்தை" . என்ற பழமொழியே உண்டாயிட் டுதே... இப்படி ஒரு கெட்டப் பேரோட நான் இருக்க வேண்டுமா?" அப்படி என்றது.சரி ..இது இருக்கட்டும் என்று அடுத்த படியாக வேப்ப மரத்தினருகே போனார்.அது தன்னுடைய வேதனையை வெளியிட்டது." எனக்கு எவ்வளவோ மருத்துவ குணங்கள் எல்லாம் இருக் கிறதா சொல்கின்றார்கள்...இருந்தாலும் என்ன பிரயோசனம்... என்னுடைய பழத்தை மனிதர்கள் விரும்பி சாப்பிடறதில்லையே! " என்றது. ராஜா அடுத்த படியாக இருந்த ஒரு பனை மரத்திடம் போனார்."நான் நல்ல உயரமாகத்தான் வளர்ந்திருக்கின்றேன். ஏனைய மரங்கள் எல்லாம் என்னை அண்ணாந்து தான் பார்க்க வேண்டும். இருந்தாலும் என்னிடம் நிழலுக்காக யாரும் வந்து ஒதுங்குகிறதில்லையே " என்றது.என்ன இது எல்லா மரமும் இப்படி திருப்தி இல்லாமல் இருந்து கொண்டிருக்கே என்று நினைத்துக் கொண்டே ராஜா அடுத்த படியாக அங்கே இருந்த ஒரு பைன் மரத்தின் அருகே போனார்.அழகாக உயரமாக பசுமையாத் தான் இருந்தது. ஆனால் பழமோ பூவோ கிடையாது அதை நினைத்து அது வருத் தப்பட்டுக் கொண்டிந்தது.

ஓக் மரம் ஒன்று நின்று கொண்டிருந்தது...அது என்ன சொல்லியது என்றால் " இலையுதிர் காலத்திலே என் மேலே இருக்கின்ற எல்லா இலைகளும் உதிர்ந்து போவது.. முடி உதிர்ந்த மனிதர்கள் மாதிரி மொட்டையாக நான் நிற்க வேண்டியிருக்கின்றது... என்ன வாழ்க்கை இது " என்று சொல்லி அலுத்துக் கொண்டது.சரி.. புளிய மரம் என்ன சொல்கிறது என பார்ப்போம் என்று அதன் அருகே போனார்."என்னுடைய நிழலிலே யாரும் தங்க மாட்டாங்க... உடம்புக்கு சூடுன்னு ஒதுங்கிப் போயிடுவாங்க".அடி மரத்தைப் பார்த்தீங்க என்றால் பட்டையெல்லாம் உரிஞ்சு பார்க்கிறதிற்கே கேவலமாக இருப்பேன்! " அப்படி என்று அது.

முருங்கை மரம் என்ன சொல்லியது தெரியுமா?"என்னுடைய இலை–காய் எல்லாம் சாப்பிடுகிறவர்களுக்கு சத்து கொடுக்கிறது வாஸ்தவம். ஆனால் என் உடம்பிலே சத்தே கிடையாது.. கொஞ்சம் வேகமாக காத்து அடித்தால் முறிந்து விழுந்து விடுகின்றேன். என்ன வாழ்க்கை இது?"அப்படி என்று சொல்லி வருத்தப்பட்டது.ராஜா யோசித்தார்... என்ன இது ...மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம்.மழை பெய்கிறதுக்கே அது தான் காரணம்.. பூமி செழிப்பாக இருக்கிறதுக்கு அது தான் காரணம்.. வீடு கட்ட மரம் ,நாற்காலி செய்ய உபயோகிப்பது மனிதனுக்கு வேண்டிய ஆகாரங்களையும் கொடுகின்றது.

அப்படி எல்லாம் இருந்தும் எல்லா மரமும் நிம்மதி இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றதே! என்று நினைத்தார்.அப்போ அங்கே இருந்த ஒரு மகிழ மரம் அவர் கண்ணிலேபட்டது. அந்த மரம் மட்டும் நிம்மதியாக மகிழ்ச்சியாக இருக்கிறது மாதிரி.தெரிந்தது.உடனே ராஜா அதனிடம் போனார்."உனக்கு மனதிலே ஒரு குறையும் இல்லையா?" என்று கேட்டார். இல்லை நான் சந்தோசமாகத் தான் உள்ளேன் என்று கூறியது மகிழ மரம். "அப்படியா ? என்று ஆச்சரியமாக கேட்டார் ராஜா." ஆமாம் மன்னா ... இந்த இடத்திலே நீங்க ஒரு முருங்கை மரத்தையோ வேப்ப மரத்தையோ கூட நட்டிருக்கலாம். ஆனால் இந்த இடத்திலே நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீங்களே ... அதிலே எனக்குப் பெருமை அதுவே எனக்குத் திருப்தி !"அப்படி என்றது மகிழமரம்.

மகிழ மரம் சாதாரணமாகத்தான் இருக்கும்.இளம் மஞ்சள் நிறத்திலே பூக்கள் ...அது காய்ந்தும் மணம் வீசும்.மகிழ மரம் மாதிரி மனத்திருப்தியோட வாழ நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.நாம் இந்த உலகத்திலே ஒரு நாயாவோ நரியாவோ கூட பிறந்திருக்கலாம். மனிதனாக பிறந்திருக்கோம்.. அதுவே பெருமையில்லையா? இந்த 'நிறைவு' தான் மகிழ்ச்சியின் இரகசியம்.ஒரு பையன் அப்பாவிடம் போய்.. " அப்பா நீங்க இந்த உலகத்திலே ஒரு மனிதாக பிறந்தது என்னோட அதிர்ஷ்டம் என்றான்.. ஏன்டா அப்படி சொல்கிறாய்! " என்றார் அப்பா."நீங்க ஒரு கரடியா பிறந்திருந்தால் இந்நேரம் நானும் ஒரு கரடிக்குட்டியாகத்தானே இருந்திருப்பேன்! "அப்படி என்றான்.

# ஊடகவியலாளர்கள் உண்மையான தகவல்களை வழங்க முன்வரவேண்டும் - யாப்பா



(கொழும்பு)

ஊடகவியலாளர்களைப் பாதுகாத்து அவர்களுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து ஊடகவியலாளர்களுக்குதிருப்தியான சேவையை பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். அதேபோல், ஊடகவியலாளர்களும் மக்களுக்கு உண்மையான தகவல்களைப் பக்கச்சார்பின்றி வழங்குவதற்கு முன்வர வேண்டுமென தகவல் தொலைத்தொடர்புத்துறை இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மாத்தறையில் லேக்ஹவுஸ் நிறுவன கிளையொன்றை கடந்த முதலாம் திகதி திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாத்தறை பேருந்து நிலையத்தின் மேல்மாடியில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தில் பக்ஸ் வசதிகள், ஈமெயில் வசதிகள் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

இராஜாங்கஅமைச்சர் மேலும் தெரிவிக்கையில், ஊடகங்கள் உண்மை நிலையினை வெளியிட முன்வரவேண்டும். தவறான விடயங்களை வெளியிடுவதன் மூலம் சமூகத்தில் பல பிரச்சினைகள் உருவாக வழியேற்படும். நாட்டின் அபிவிருத்திக்கு ஊடகவியலாளர்கள் ஆற்றும் சேவை மகத்தானதாகும்.

எனினும் அவர்கள் ஆற்றும் சேவைக்கு பிரதேச ஊடகவியலாளர்களுக்கு வேதனம் கிடைப்பதில்லை. அவர்கள் தமது சேவையை திருப்தியாக மேற்கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## இலங்கைப் பெண்ணிற்கு கொரோனா உறுதியானது

(கொழும்பு)

உலகினை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைப் பெண்ணொருவர் இத்தாலியில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

குறித்த பெண், இத்தாலியில் வசிப்பவர் என்றும் இத்தாலியில் உள்ள இலங்கைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு வைரஸினால் பாதிக்கப்பட்டவர் லோம்பார்டியில் உள்ள ப்ரெசியாவில் வசிக்கும் 46 வயதுடைய பெண் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பாக இலங்கையில் 18 பேர் தொடர்ந்தும் கண்காணிப்பில் உள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் பொதுமக்கள் முகமூடி அணிய வேண்டிய அவசியமில்லை என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் காய்ச்சல், தடிமன் போன்ற நோய் இருப்பவர்களும் குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களுக்கும் பொது இடங்களுக்குச் செல்லும்போது முகமூடி அணிவது நல்லது என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை உலக சுகாதார நிறுவனம் கடந்த சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் உலகளவில் 53 நாடுகளில் பரவியுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தினால் 85,403 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அதில் தற்போது மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## போதைமாத்திரையுடன் ஒருவர் கைது

(கல்முனை)

கல்முனை பிரதேசத்தில் போதை மாத்திரை மற்றும் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை கைது செய்துள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் கல்முனை மதுரங்கா வீதியில் வைத்து குறித்த இளைஞரை வழி மறித்து சோதனை செய்த போது அவரிடமிருந்து 17 போதைப் பொருள் குளிசை மற்றும் கஞ்சா என்பவற்றை மீட்டதையடுத்து அவரை கைது செய்தனர்.

இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் 21 வயதுடைய இளைஞர் எனவும் இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-2)

## வெடிபொருட்களுடன் ஒருவர் கைது

(திருமலை)

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் டைனமைட் வெடிபொருட்களுடன் ஒருவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 12 டைனமைட் குச்சிகள், 30 அடி மற்றும் 24 அடி நீளமான வயர் ரோல்களும் கைப்பற்றப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் முகம்மதியா நகர், மட்கே பிரதேசத்தில் உள்ள அவரின் வீட்டில் டைனமைட் வெடிபொருட்கள் பதுக்கி வைத்திருந்த நிலையிலே கைப்பற்றப்பட்டதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர். (ஜ-2)

## கோட்டாவின் ஆட்சியில் இனவாதத்திற்கு இடமில்லை

### விமல் திட்டவட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்தவொரு இனவாத செயற்பாடுகளையும் ஆதரிக்க மாட்டார் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

வெலிஓயா பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், நாட்டினதும் அதன் அனைத்து குடிமக்களினதும் தேவைகளுக்காக எந்தவொரு தியாகத்தையும் செய்ய அரசாங்கம் தயாராக உள்ளது என்த் தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஒருபோதும் இனவாதத்தை பிரசாரம் செய்யவோ அல்லது அதற்கு ஆதரவு வழங்கும் விதமாகவோ செயற்படாது என்றும் தெரிவித்தார்.

எனவே சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் நல்வாழ்வுக்காக அனைத்து உறுதிமொழிகளையும் செய்ய தற்போதைய அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.



ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் மூடப்பட்ட பல தொழிற்சாலைகள் திறக்கப்படும் என்றும் குறிப்பாக கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மூடப்பட்ட ஒட்டுசுட்டான் கண்ணாடித் தொழிற்சாலை, வாழைச்சேனையில் உள்ள காகித உற்பத்தி தொழிற்சாலை என்பன மீண்டும் செயற்பாட்டிற்கு வரும் என்றும் அவர் உறுதியளித்தார். (ஜ-2)

## இலங்கையில் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் 18 பேர் வைத்தியசாலைகளில்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் இல்லாத போதிலும் உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்துள்ளமையினால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய சுகாதார பழக்க வழக்கங்களை பின்பற்றுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, கொரோனா வைரஸின் தாக்கம் நாட்டில் அதிகளவில் இல்லையென்பதனால் பாதுகாப்புக் கவசங்களை அணிய வேண்டிய தேவையில்லை என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பிலான சந்தேகத்தின் பேரில் 18 பேர் நேற்றையதினம் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுள் நான்கு வெளிநாட்டவர்களும் உள்ளடங்குவதான சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகளுடன் 10 பேர் அனுமதிக்கப்பட்டதுடன், அவர்களுள் மூன்று வெளிநாட்டவர்களும் உள்ளடங்குகின்றனர்.

ராகமை போதனா வைத்தியசாலையில் ஒருவரும், குருநாகலை வைத்தியசாலையில் வெளிநாட்டவர் ஒருவர் உள்ளடங்கலாக இருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், நீர்கொழும்பு போதனா வைத்தியசாலையில் மூவரும் சிறுவர் வைத்தியசாலையில் ஒருவரும் உள்ளடங்கலாக 18 பேரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டனர். (ஜ-2)

## இம்மாத இறுதியில் O/L பெறுபேறு

(கொழும்பு)

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.


இம்முறை க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகளின் மாவட்ட ரீதியிலான அல்லது அகில இலங்கை ரீதியிலாக தரப்படுத்தல்கள் வெளியிடப்படமாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார். 2019 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, 4987 பரீட்சை நிலையங்களில் இடம்பெற்றதோடு இதில் 7 இலட்சத்து 17,008 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இதேவேளை இம்முறை இடம்பெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நேற்று முன்தினத்துடன் நிறைவடையவிருந்த நிலையில் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

11

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் யாழ்.ஊடகவியலாளர்களைச் சந்தித்த வடமாகாண ஆளுநர் வடமாகாண முதலமைச்சர் நியதிச்சட்டம் இலங்கையின் அரசியலமைப்பிற்கும் மாகாண சபைகள் சட்டத்திற்கும் முரணானதாக உருவாக்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டியிருந்தார். மேலும் மாகாண சபையில் மாகாணசபை நிதியம், அவசரகால நிதியம் ஆகிய இரு நிதியங்கள் மட்டுமே இருக்க முடியும். முதலமைச்சர் நிதியம் என்ற 3 ஆவது நிதியம் இருக்க முடியாது என கூறியதுடன், முதலமைச்சர் நிதியத்தினை ஜனாதிபதியின் கவனத்திற்கு அனுப்பிவைக்க உள்ளதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் அப்போது வடமாகாண சபையில் வடமாகாண ஆளுநர் நிதியம் என்ற மூன்றாவது நிதியம் இருந்தது குறிப்பிடத்தக்கது. எனவே மாகாண சபையில் இரண்டுக்கு மேற்பட்ட நிதியங்கள் வைத்திருக்க முடியுமா? என்பதும் அவ்வாறு வைத்திருப்பதாயின் ஆளுநரின் ஒப்புதல் பெற வேண்டுமா? என்பதையும் விளங்கிக் கொள்வது கடினமாகவுள்ளது.

### வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளின் ஆளுநரின் நிதியங்கள் அவ்அவ் மாகாண சபைகளில் நியதிச் சட்டங்களாக உருவாக்கப்படவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளின் ஆளுநரின் நிதியங்கள் அவ்அவ் மாகாண சபைகளில் நியதிச் சட்டங்களாக உருவாக்கப்படவில்லை. நியதிச் சட்டங்களாக உருவாக்கப்படாமல் நடைமுறைப்படுத்துவது நிதிப்பிரமாணங்களுக்கு முரணானது என நான் கருதுகிறேன்.

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஆளுநரின் நிதியங்கள் அம் மாகாண சபைகளில் நியதிச் சட்டங்களாக உருவாக்கப்படவில்லை. நியதிச் சட்டங்களாக உருவாக்கப்படாமல் நடைமுறைப் படுத்துவது நிதிப்பிரமாணங்களுக்கு முரணானது என்ற கருத்தும் உண்டு.**

### வடமாகாண ஆளுநர் நம்பிக்கை நிதியம்

**தோற்றமும் நோக்கமும்:-** ஆளுநர் நம்பிக்கை நிதியம் வறுமையற்ற சமூகத்தை மாகாணத்தில் உருவாக்குகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் மக்களுக்காகவும் இம்மாகாணங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்காகவும் ஆளுநர் நம்பிக்கை நிதியம் 27 டிசெம்பர் 2000 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனி நிர்வாக அலகுகளாக மாற்றமடைந்தபின் 1 ஜனவரி 2007 ஆம் ஆண்டு ஆளுநர் நம்பிக்கை நிதியம் வடமாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆளுநர் நம்பிக்கை நிதிய நிதி வடமாகாணத்தினைச் சேர்ந்த மக்களுக்கு பின்வரும் தேவைகளுக்கு வழங்கப்படுகின்றது.

i.வறுமை ஒழிப்பு

ii.கல்வி, கலாசார செயற்பாடுகள் என்பவற்றில் சிறந்த ஆற்றலை வெளிக்காட்டியவர்களை கௌரவித்தல்

iii.அர்ப்பணிப்புடன் வடமாகாண மக்களுக்கு கடமையாற்றிய உத்தியோகத்தர்களை கௌரவித்தல்

iv.சத்திரசிகிச்சை, மருத்துவ சேவைகளை பெற்றுக் கொண்ட மக்களுக்கு உதவுதல்

v.ஆளுநரினாலும் ஆளுநர் நம்பிக்கை நிதிய நிதி நிர்வாக சபையினாலும் அங்கீகரிக்கப்படும் ஏனைய தேவைகள்.

தற்சமயம் அதிகரித்து வரும் பணச்சுமை காரணமாக சத்திரசிகிச்சைக்கு உட்படும் பலர் ஆளுநர் நம்பிக்கை நிதிய நிதியுதவியினை பெற்று வருகின்றனர். பொதுமக்கள், நிறுவனங்கள், உள்நாடு, வெளிநாட்டினை சேர்ந்த சமூக அமைப்புக்கள் ஆகியவற்றின் ஊடாக ஆளுநர் நம்பிக்கை நிதியத்திற்கு நன்கொடைகளும் பங்களிப்புக்களும் கிடைக்கின்றன. அத்துடன் வடமாகாணத்தால் முன்னெடுக்கப்படும் வருவாயீட்டும் செயற்றிட்டங்களினாலும் நிதி பெறப்படுகின்றது. ஆளுநர் நம்பிக்கை நிதியம் மாகாணத்தில் பல வழிகளில் உதவிபுரிகின்றது என்பதில் ஐயமில்லை. வறுமை ஒழிப்பு, கல்வி மேம்பாடு, அதி உன்னத செயற்பாடுகளுக்கான அனுசரணை மற்றும் மருத்துவ சிகிச்சை போன்ற தேவைகள் உள்ள வசதி இல்லாத வடமாகாண மக்களுக்கு இது பெரிதும் பயன்படும் என்பது உறுதி.

### கிழக்கு மாகாண ஆளுநர் நம்பிக்கை நிதியம்

**தோற்றமும் நோக்கமும்:-** வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் மக்களுக்காகவும் இம்மாகாணங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்காகவும் ஆளுநர் நம்பிக்கை நிதியம் 27 டிசெம்பர் 2000 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனி நிர்வாக அலகுகளாக மாற்றமடைந்தபின் 1 ஜனவரி 2007 ஆம் ஆண்டு ஆளுநர் நம்பிக்கை நிதியம் கிழக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநர் நம்பிக்கை நிதியம் கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்ரமவால் G/EPC/A/GTF ஆம் இலக்க கடிதத்தின்படி 1 ஏப்ரல் 2011 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் வண்ணம் 2011 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டது. அதாவது ஆளுநரின் கடிதத்தின்படியே ஆளுநர் நம்பிக்கை நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. இது மாகாண சபையில் நியதிச்சட்டமாக இது வரையில் ஆக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆளுநர் நம்பிக்கை நிதிய நிதி கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த மக்களுக்கு பல்வேறு தேவைகளுக்கு (தேவைகள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது) வழங்கப்படும் என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### மாகாண சபைகளில் உருவாக்கப்பட்டுள்ள வேறுபட்ட நிதியங்கள்

ஒவ்வொரு மாகாண சபையும் தத்தமது தேவைக்கேற்ப வெவ்வேறு நிதியங்களை உருவாக்கியுள்ளன. கணக்காளர் நாயகத்தினால் வருடந்தோறும் வெளியிடப்படும் மாகாண சபைகளின் கணக்காய்வின் முடிவுகள் பற்றிய அறிக்கையினை பார்க்கும் போது பின்வரும் தகவல்கள் பெறக்கூடியதாக இருந்தது.

தென் மாகாணசபையின், 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வறிக்கையின்படி, அம்மாகாண சபையில் பின்வரும் நிதியங்கள் உருவாக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

(1)மாகாண வறுமை ஒழிப்பு நிதியம் **(Provincial Poverty Alleviation Fund)**

(2)கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் **(Co-operative Development Fund)**

(3)சமூக சேவைகள் நிதியம் **(Social Services Fund)**

(4)மாகாண விளையாட்டு நிதியம் **(Provincial Sports Fund)**

(5)கலாசார மற்றும் கலை நிதியம் **(Cultural and Arts Fund)**

ஊவா மாகாணசபையின், 2015 ஆம் ஆண்டின் கணக்காய்வறிக்கையின்படி, இம்மாகாண சபையில் பின்வரும் நிதியங்கள் உருவாக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவிருந்தது.

(1)இந்து கலாசார விவகார நிதியம் **(Hindu Cultural Affairs Fund).**

(2)புத்தசமய விவகார அபிவிருத்தி சபை **(Buddhist Affairs Development Board).**

(3)வீடமைப்பு அபிவிருத்தி நிதியம் **(Housing Development Fund).**

(4)கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் **(Co-operative Development Fund).**

(5)ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து ஆணையம் **(Uva Provincial Passenger Transport Authority).**

இவ்வாறு ஒவ்வொரு மாகாண சபையும் வெவ்வேறு நிதியங்களை நடைமுறையில் வைத்திருக்கின்றன. வடமத்திய மாகாண சபை மற்றும் வடமேல் மாகாண சபைகளில் 10 இற்கு மேற்பட்ட நிதியங்கள் நடைமுறையில் இருப்பதைக் காணலாம். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் இவ்வாறான நிதியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

### மாகாணசபையொன்றினால் திரட்டப்படுகின்ற கடன்கள்

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 21 இல் மாகாணசபையொன்றினால் திரட்டப்படுகின்ற கடன்கள் சம்பந்தமாக கூறப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 21(1)- மாகாணசபையொன்றினால் திரட்டப்படுகின்ற கடன்கள் தொடர்பில் நிதி என்னும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சர் உத்தரவாதங்கள் அளிக்கலாம்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 21(2)-** பிரிவு 21(1) இன் கீழ் உத்தரவாதமொன்று அளிக்கப்பட்டதை உடனடுத்துப் பின்னர், நிதியென்னும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரானவர், அத்தகைய உத்தரவாதம் பற்றிய கூற்றொன்றைப் பாராளுமன்றத்தின் முன் இடுதல் வேண்டும்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 21(3)-** பிரிவு 21(1) இன் கீழ் அளிக்கப்படுகின்ற உத்தரவாதமொன்று நிறைவேற்றப்படுதற்குத் தேவைப்படுகின்ற பணத்தொகையெதுவும் இலங்கை திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 21(4)-** பிரிவு 21(1) இன் கீழ் அளிக்கப்படுகின்ற உத்தரவாதம் ஒன்றை நிறைவேற்றப்படுவதற்கு இலங்கை திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுகின்ற பணத்தொகையெதுவும் நிதி என்னும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில், அதற்கான வட்டியுடன் சேர்த்து, நிதி என்னும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சர் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப்பகுதிக்குள்ளும் மாகாண சபையினால் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 21(5)-** மாகாண சபையொன்று தொடர்பில் இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட கடனொன்றின் ஏதேனும் ஒரு பாகம் தற்போதும் நிலுவையாக இருந்தால் அல்லது அது தொடர்பில் பிரிவு 21(1) இன் கீழ் உத்தரவாதமொன்று அளிக்கப்பட்டிருந்தால், நிதி என்னும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரின் சம்மதமில்லாமல் மாகாண சபையொன்று கடன் எதுவும் திரட்டமுடியாது.

### மாகாண கருத்திட்டங்களுக்கு அந்நிய நாட்டு உதவி - 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 22.

மாகாணமொன்றில் கருத்திட்டம் அல்லது திட்டம் ஒன்றுக்காகவென அரசாங்கத்தினால் கலந்துபேசி முடிவு செய்யப்பட்ட அந்நியநாட்டு உதவியானது அத்தகைய கருத்திட்டத்துக்கு அல்லது திட்டத்திற்கு அரசாங்கத்தினால் குறித்தொதுக்கப்படல் வேண்டும்.

### மாகாண நிதியத்தின் கணக்காய்வு - மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 23

**1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 23(1)-** மாகாணமொன்றின் மாகாண நிதியத்தினது கணக்காய்வுக்கும் கணக்குகளுக்கும் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையானது ஏற்புடையதாதல் வேண்டும்.

(கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளும் பணிகளும் மற்றும் கணக்காய்வு செய்யவேண்டிய அரசு சார்பு நிறுவனங்களும் பற்றி அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ளது).

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 23(2)-** மாகாணமொன்றின் மாகாண நிதியத்தின் கணக்குகள் தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரதியொன்று, ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆளுநர் அதை மாகாணசபையின் முன் இடச்செய்வித்தல் வேண்டும்.

(தொடரும்)

# தமிழின அழிப்பிற்கு நீதி கேட்டுத் தொடரும் மனிதநேய ஈருருளிப் பயணம்





(லண்டன்)

தொடர்ச்சியாக 8 ஆம் நாளாகத் தமிழின அழிப்பிற்கு நீதி கேட்டுத் தொடரும் மனிதநேய ஈருருளிப் பயணம் நேற்று முன்தினம் பிரான்ஸ் நாட்டை வந்தடைந்தது.


அதேநேரம் நேற்று முன்தினம் ஜேர்மன் நாட்டின் சார்புறூக்கன் மாநகரின் உதவி நகரபிதாவைச் சந்தித்ததுடன், தற்போதைய காலகட்டத்தில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் பல வகைகளில் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்பதையும் 11 ஆண்டு காலம் கழிந்தும் தமிழர் தாயகத்தில் எம் இனம் ஒரு திட்டமிட்ட முறையில் மறைமுகமான இனவழிப்புக்குள்ளாக்கப்படுகின்றார்கள் எனவும் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக மேற்கொள்ளப்படும் தொடர் போராட்டம் பற்றியும் பல முக்கிய அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து மனிதநேய ஈருருளிப்பயண செயற்பாட்டாளர்களால் மனு கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் பிரான்ஸ் நாட்டை வந்தடைந்த ஈருருளிப் பயணம் சார்குமின் மாநகரின் நகரபிதா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான அரசியல் சந்திப்பை மேற்கொண்டிருந்தது.

அதேநேரம் பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகத்தில் மனிதநேய ஈருருளிப்பயண செயற்பாட்டாளர்களை வரவேற்கும் முகமாக தமிழ் மொழியிலேயே "வணக்கம், வரவேற்கின்றோம்" என்று நுழைவாயிலில் எழுதி வைக்கப்பட்டிருந்த வாசகம் மன நெகிழ்வைத் தந்தது.

மற்றும் பத்திரிகையுடனான முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து, தொடர்ந்த ஈருருளிப் பயணம் சார்யூனியன் மாநகர சபை முதல்வரைச் சந்தித்ததுடன் மனுவும் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து Phalsbourg மாநகரை வந்தடைந்தது ஈருருளிப் பயணம். (ஜ-2)

# நுண்நிதிக் கடனிலிருந்து மக்களை மீட்க பிரதமர் மகிந்த அதிரடி நடவடிக்கை



(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் தற்கொலைகளுக்கு முக்கிய காரணியாக விளங்கும் நுண்நிதி பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக அரசாங்கம் முக்கிய திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

நுண்நிதி நிறுவனங்களின் அதிக வட்டி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை அதிலிருந்து மீட்டெடுப்பதே இந்நடவடிக்கையின் நோக்கமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக வழங்கப்படும் குறைந்த வட்டியிலான கடன் தொகையை 40 ஆயிரம் ரூபாவிலிருந்து 60 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

விசேடமாக வடக்கு மற்றும் வடமத்திய மாகாண மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த அழுத்தத்தில் இருந்து அவர்களை விடுவிப்பதற்காக கூட்டுறவு கிராமிய வங்கிகள் மற்றும் சிக்கன கடன் சங்கங்கள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது வழங்கப்படும் இந்த குறைந்த வட்டியிலான கடன் தொகையின் எல்லையை அதிகரிக்குமாறு பல்வேறு தரப்புகளும் நிதியமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன. 6 மாவட்ட செயலகங்கள் ஊடாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டம் தொடர்பில் மாவட்ட செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு செவிசாய்த்து இதனை மேலும் ஒழுங்குபடுத்துவதற்கு பிரதமர் தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக வடமாகாணத்திற்கென சுமார் 292 மில்லியன் ரூபாவையும் வடமத்திய மாகாணத்திற்காக 250 மில்லியன் ரூபாவையும் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில், நுண்நிதி கடன் நெருக்கடியினால் 14 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சர் என்ற வகையில் மேற்கொண்டுள்ள இந்தத் தீர்மானம் காரணமாக, மேலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கடன் பெறுவதற்கு தகுதிபெறவுள்ளனர். இது தவிர வருடாந்த வட்டி வீதத்தை 14 சதவீதத்திலிருந்து 9 சதவீதம் வரை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்தின் முன்னேற்ற அறிக்கையை மூன்று மாதத்திற்கு ஒரு முறை திறைசேரிக்கு அனுப்புவதற்காக மாவட்ட நடவடிக்கைக் குழுவொன்றும் அமைக்கப்படும். கிராமிய மக்களை கடன் சுமையிலிருந்து விடுவிக்கும் பொறுப்பு இந்தக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும். (ஜ-2)



மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு கிராமம் தோறும் சென்று தொடர் மக்கள் சந்திப்புக்களை நடத்தி வருகிறது. இதன் ஒரு கட்டமாக கடந்த சனிக்கிழமை மாலை மறவன்புலவு பகுதியில் மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

# மொஹமட் ரூமியின் பயணத்தடை தளர்வு




(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பல சர்ச்சைகளை ஏற்படுத்திய வெள்ளை வான் ஊடக சந்திப்பு சம்பவத்தின் நான்காவது சந்தேகநபரான அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமிக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை தற்காலிகமாக தளர்த்தி கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த முறைப்பாடு கடந்த தினம் அழைக்கப்பட்ட போது மொஹமட் ரூமி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, வெளிநாட்டில் நடத்தப்படும் தேயிலை கண்காட்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக தனது கட்சிக்காரர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

அதற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத் தடையை குறித்த காலப்பகுதியில் தளர்த்தி உத்தரவிடுமாறு நீதிமன்றில் கோரியிருந்தார்.

குறித்த கோரிக்கையை ஆராய்ந்த நீதவான் சந்தேகநபர் மொஹமட் ரூமிக்கு குறித்த காலப்பகுதியில் வெளிநாடு செல்ல அனுமதியளித்த நிலையில், குறித்த காலப்பகுதிக்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத் தடையை தளர்த்துமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டார். (ஜ-2)

# இளைஞர் பாராளுமன்றத்திற்கு யாழ்.பல்கலை.மாணவன் தெரிவு

(கொழும்பு)

நாட்டின் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற இளைஞர் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் புவனேஸ்வரன் வசந்தராஜ் மிக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் இளைஞர் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்.

இளைஞர் பாராளுமன்றத் தேர்தல்கள் கடந்த மாதம் 22 ஆம் திகதி நடந்தது. இளைஞர் பாராளுமன்றத்துக்கென இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இருந்து தேர்தல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு நபருக்கான ஆசனங்கள் வழங்கப்படும்.

எனவே குறித்த ஆசனங்களுக்கு நபர்களை தெரிவு செய்யும் தேர்தல் நேற்று இடம் பெற்றது.

இத்தேர்தல்களின் வாக்கு முடிவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலைப்பீட மாணவன் புவனேஸ்வரன் வசந்தராஜ் 2419 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டியிருந்தார். (ஜ-2)

# தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காகவே பல்வேறு கட்சிகள் களமிறக்கப்பட்டுள்ளன

## ஸ்ரீநேசன் குற்றச்சாட்டு



(மட்டக்களப்பு)

வடகிழக்கில் தற்போது பல்வேறு கட்சிகள் சூழ்ச்சிகள் மூலமாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காக களமிறக்கப்பட்டுள்ளன என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் குற்றஞ்சாட்டினார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"வடகிழக்கில் இன்று பல்வேறு கட்சிகள் சூழ்ச்சிகள் மூலமாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காக களமிறக்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அமைச்சர் தெளிவாக ஒரு விடயத்தினை தெரிவித்தார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளில் இருந்து வாபஸ் பெறுவதாக தெரிவித்தார்.


யுத்த காலத்தில் இடம்பெற்ற அழிவுகள், படுகொலைகள், காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுக்கான பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தினை ஏற்படுத்தல், மனித உரிமைகள் தொடர் பான விடயங்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ளன.

இந்த விடயங்களில் இருந்து அரசாங்கம் பின்வாங்கு கின்றது என்ற அர்த்தம் இதன் மூலம் கொள்ளப்படுகின்றது.

உள்ளகப்பொறிமுறை மூலம் இவற்றினை செய்யமுடியும் என இலங்கையால் கூற முடியும். ஆனால் உள்ளகப் பொறிமுறையென்பது வெற்றியளிக்காத ஏமாற்றுவித்தை என்பதை கடந்த காலத்தில் நடைபெற்ற பல்வேறு செயற்பாடுகள் மூலம் நாங்கள் விளங்கியுள்ளோம்.

இந்த நிலையில், ஐ.நா.சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளில் இருந்து விலகியதன் ஊடாக இந்த நாட்டில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த முடியாது, மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றத்தினை அடைய முடியாது, பொறுப்புக்கூற முடியாது என்பதன் அர்த்தத்தினையே நாங்கள் புரிந்து கொள்ள முடிகின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# சூழலியல் தொழில் வல்லுநர் நிறுவக சட்டமூலத்தில் சபாநாயகர் கையொப்பம்



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இலங்கை சூழல் சார் உயர்தொழிலர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) தனிநபர் சட்டமூலத்தில் சபாநாயகர் கரு ஜெயசூரிய கைச்சாத்திட்டார்.

பாராளுமன்றத்தின் 74 ஆவது நிலையியற் கட்டளைக்கு அமைய சபாநாயகர் தனது கையொப்பம் இட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இலங்கை சூழல்சார் உயர்தொழிலர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தை தனிநபர் சட்ட மூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்ததுடன், இது சபையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. சூழல்சார் உயர்தொழிலர்களின் மரியாதை மற்றும் மதிப்பை மேம்படுத்தல், பொதுமக்கள் மத்தியில் சூழல்சார் அறிவைப் பரப்புதல். சூழல்சார் பிரச்சினைகள் பற்றிய விஞ்ஞான ரீதியிலான தெளிவை மேம்படுத்தும் நோக்கில் துறைசார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதை ஊக்குவித்தல், சூழல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கான பலமான மேடையொன்றை வழங்குவதை இது நோக்காகக் கொண்டிருக்கும்.

அத்துடன், அரசாங்கம் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அமைச்சு அல்லது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட எழுத்திலான கோரிக்கைக்கு அமைய, இயற்கை மற்றும் பௌதீக சூழலைப் பாதுகாத்தல் மேம்படுத்தல், சுற்றாடல் விஞ்ஞானிகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வசதியை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அமைச்சு அல்லது திணைக்களம் அல்லது மாகாண சபைக்கு உதவுதல் என்பவற்றையும் இச்சட்டமூலத்தின் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டது. (ஐ-2)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1993

ராகினி




கபில்ராஜ்




சுபைதா




விதுரன்

ஆசிரியர் : நீ இந்த பரீட்சையில 90 மார்க் வாங்கனும்

மாணவன் : 100 மார்க் வாங்குவேன் சார்.

ஆசிரியர் : டேய் காமெடி பண்ணாதடா.

மாணவன் : யார் சார் முதல்ல காமெடி பண்ணது.

அமுதா




கம்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அரசாங்கம் ஆரம்பித்த திட்டங்களில் தேர்தல் ஆணைக்குழு தலையிடாது

## சமன் ரத்நாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ள அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க தேர்தல் ஆணைக்குழு தடை விதிக்காது என பிரதித் தேர்தல் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குதல் மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வு வழங்குதல் போன்ற திட்டங்களை முன்னெடுப்பதில் எந்தச் சிக்கலும் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் செயற்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றம் கலைக்கப்படும் நிலையில் அரசாங்கம் ஆரம்பித்துள்ள 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குதல், தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா கொடுப்பனவு வழங்குதல் என்பவற்றை தொடர்ந்து முன்னெடுக்க முடியுமா? என வினவியதற்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முதல் அனுப்பப்பட்டு வருவதோடு ஒரு பகுதியினருக்கு நேற்று முன்தினம் கடிதங்கள் கிடைத்துள்ளன. பாராளுமன்றம் கலைக்கப்படுவதோடு இந்த செயற்பாடுகள் தடைப்படலாமென அச்சம் எழுந்துள்ளது.

இதுபற்றி தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

ஏற்கனவே ஆரம்பித்துள்ள திட்டங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்படுவதை தடுக்க முடியாது. அவை தேர்தல் அறிவிப்பிற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அவற்றை தொடர்வதற்கு அரசாங்கத்தால் முடியும். தேர்தல் அறிவிப்பின் பின்னர் புதிய திட்டங்களை ஆரம்பிப்பது தேர்தல் சட்டத்திற்கு முரணானது. அதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் ரத்னாயக்க கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் எதிர்வரும் நாட்களில் கைச்சாத்திடப்படுவது குறித்தும் அவரிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பிரதி ஆணையாளர், இதுவும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஒப்பந்தம் பின்னர் கைச்சாத்திட்டாலும் அதற்கும் எம்மால் தடை போட முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-2)

# இலங்கை வரும் வெளிநாட்டவர்களை 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

இத்தாலி, தென்கொரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கை வரும் அனைத்துப் பயணிகளையும் 14 நாட்கள் தனிமைப்படுத்திக் கண்காணிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்றுக் காலை சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஆகிய இரு தரப்பினரும் இந்த செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனத் தெரிவித்தார். இதற்காக சிறிது காலம் தேவை என்றும் குறித்த பகுதியை இனங்காண குறிப்பிடத்தக்க சில காலம் தேவைப்படுவதாகவும் தெரிவித்த அனில்ஜாசிங்க அநேகமான வெளிநாட்டவர்கள் ஒரே நேரத்தில் வருகை தந்தால் அவர்கள் அனைவரும் அசௌகரியத்திற்கு முகங்கொடுக்க நேரிடும் எனத் தெரிவித்தார்.

இதன் காரணமாக வெளிவிவகார அமைச்சின் ஊடாக தூதரகங்கள் மற்றும் நாடுகளுக்கு அறிவிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதனூடாக எதிர்வரும் நாட்களில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

கடந்த 25, 29 ஆம் திகதிகளில் தென்கொரியாவில் இருந்து 419 பேரும் இத்தாலியில் இருந்து 726 பேரும் வருகை தந்துள்ளதாக தெரிவித்த அவர், தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந்த எண்ணிக்கை குறைவடையக் கூடும் எனத் தெரிவித்தார்.

இந்தப் பணிகள் எளிதானவை அல்ல எனத் தெரிவித்த வைத்தியர் இலங்கைக்கு கொரோனா நிலைமை ஒன்று ஏற்பட்டால் அது தேசிய அனர்த்த நிலையாக மாறும் எனத் தெரிவித்தார். இதன் காரணமாக சிரமங்களுக்கு மத்தியிலும் இந்தப் பணியை முன்னெடுப்பதாக அனில்ஜாசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை வரும் கப்பல்களின் பயணிகளுக்கு இலங்கைக்குள் பிரவேசிக்கத் த்டை விதிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# ஆசிரியர் ஆலோசகர் சேவையில் 4 ஆயிரத்து 971 பேர் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

ஆசிரியர் ஆலோசகர் சேவையை உருவாக்குவது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அமைச்சரவை அனுமதி வழங்கியிருப்பதால் 62 வருடங்களாக நீடித்துவரும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டியிருப்பதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியது.

இதற்கமைய 4,971 ஆசிரியர்கள் இவ்வாறு அமைக்கப்படவிருக்கும் ஆசிரியர் ஆலோசகர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தலைமையில் அண்மையில் நடைபெற்ற கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிலேயே இது தொடர்பான தகவல்களை கல்வியமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேநேரம், இலங்கை பாடசாலை அதிபர் சேவை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன், முறைசாரா கல்வி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்திருப்பதாகவும் துறைசார் மேற்பார்வைக் குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

நீண்டகாலமாக நிலவும் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுத்த நடவடிக்கைகளுக்கு பாதிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை, அதிபர் சேவை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள் துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு நன்றி தெரிவித்தனர்.

தொழிற்றுறையை அடிப்படையாகக் கொண்ட கணனி பட்டக் கல்வித் திட்டமொன்று இலங்கையின் அரச மற்றும் அரசசார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் அறிமுகப்படுத்துவது தொடர்பான யோசனையும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹினி குமாரி விஜேரத்ன, டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, விஜயபால ஹெட்டியாராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர். (9-315)

# செய்தித்துளிகள்

## காலநிலையை அறிந்து கொள்ள புதிய SMS செய்திச் சேவை

(கொழும்பு)

சீரற்ற காலநிலையிலும் கடலிற்கு செல்லும் மீனவர்களின் நலன்கருதி டயலொக் ஆசியாட்டா நிறுவனம் குறுஞ்செய்தி (SMS) மற்றும் குரல் செய்திச் சேவைகளை அறிமுகம் செய்துள்ளது.

மீனவர்கள் காலநிலை மாற்றங்கள் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதனை நோக்காகக் கொண்டு இச்சேவையை மூன்று மொழிகளிலும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த சேவைக்கு சயுரு என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தச் சேவையை அறிமுகம் செய்யும் நிகழ்வு தங்காலை மீன்பிடித்துறைமுகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வளிமண்டவியல் திணைக்களத்துடன் இணைந்து கடற்றொழில் திணைக்களமும் டயலொக் ஆசியாட்டா நிறுவனமும் இந்த சேவையை முன்னெடுக்கின்றமை முக்கிய விடயமாகும். (ஜ)

## விலை அதிகரிப்பால் பொருட்களில் கலப்படம்

(கொழும்பு)

மிளகாய்த்தூள் உள்ளிட்ட பலசரக்குப் பொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில் தரங்குறைந்த பாவனைக்கு உதவாத உற்பத்திகள் சந்தையில் விற்பனை செய்யும் செயற்பாடு அதிகரித்துள்ளதாக இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பண்டிகைக் காலங்களில் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கக் கூடும். இதனால், இது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க செயலாளர் மகிந்த பாலசூரிய பொது மக்களைக் கோரினார்.

மாத்தறை, கொழும்பு, கம்பஹா, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இரசாயன நிறங்கள் பயன்படுத்தி சோளம் மற்றும் தரங்குறைந்த மிளகுத் தூள்களைப் பயன்படுத்தி மிளகாய்த்தூள் உற்பத்தி செய்யப்படுகிறது. (ஜ)

## இறக்குமதி செய்யப்படும் மீனுக்கான வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் மீனுக்கான வரி உடன் அமுலுக்கு வரும் வகையில் பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.


அதனடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் மீனுக்கான வரி 125 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே இதுவரையில் 25 ரூபாவாக இருந்த வரி 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 | 130 | 160 |
| தக்காளி | 160 | 120 | 140 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 90 | 100 |
| கோவா | 80 | 120 | 120 | 110 | 120 |
| கரட் | 200 | 180 | 200 | 120 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 240 | 260 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 160 | 250 | 160 |
| பாகற்காய் | 180 | 150 | 160 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 100 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 | 160 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 80 | 100 |
| கறிமிளகாய் | 150 | 120 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 250 | 400 |
| போஞ்சி | 150 | 120 | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 60 | 25 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 60 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 180 | 160 | 130 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 140 | 100 | 160 |
| முள்ளங்கி | 50 | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | 110 | 100 |




# வேட்டைக்காரன்



செங்காடு என்ற மலைப் பகுதியில் வீரா என்ற ஒரு கழுதைப்புலி வசித்து வந்தது. காட்டு ஆண் விலங்கு கூட்டத்திலேயே தான் தான் அதிவீரன் என்று தன் மனைவி ராணியிடம் எப்பொழுதும் கூறும். விலங்குகள் வேட்டைக்குச் சென்று திரும்பும் போது எல்லாம், தன் மனைவியிடம் வீரா "அனைத்து வேட்டை விலங்குகள் மத்தியில், நான் தான் துணிச்சலாக செயற்பட்ட ஒரே வேட்டை விலங்கு" என்று கூறும். அன்றும் அப்படித்தான் இன்று என்ன நடந்தது தெரியுமா? நான் தனி ஒருவனாக நின்று விரட்டி, விரட்டி சிறுத்தைப் புலியையும் யானையையும் ஓடவைத்தேன் என்றது. மற்ற விலங்குகள் எல்லாம் தொடை நடுங்கிகளாக இருக்கின்றன என்று பெருமை பேசியது. நான் என் முன்னங் கால்களை வேகமாகத் தூக்கி முன்னோக்கிக் கொண்டு சென்ற போது சிங்கம் கூட என் வேகத்தைப் பார்த்து பயந்து ஓடிவிட்டது. நான் வேட்டை விலங்குகளில் மிகச் துணிச்சலான வேட்டைக்காரன் என்றது. அதைக் கேட்ட அவன் மனைவி ராணி அப்படியா? மற்ற ஆண் விலங்குகள் யாரும் இன்று வீட்டுக்கு வேட்டையாடி இறைச்சி எடுத்துட்டு செல்லவில்லைன்னு சொல்லுங்க என்றது.

"அதெப்படி அப்படியே விட முடியும். நான் வேட்டையாடியதில் நம் குடும்பத்துக்கு போக மிச்ச இறைச்சியை மற்ற விலங்குகளுக்கு பிரித்துக் கொடுத்துட்டேன். பாவம் கூட்டத்தோட, குட்டிகளோட சாப்பிட்டு மகிழ்ச்சியாக வாழட்டும் என்றது பெருந்தன்மையுடன்.

ஒரு நாள் பக்கத்து காட்டு விலங்குகளுடன் பகை உண்டானது. காட்டில் உள்ள எல்லா ஆண் விலங்குகளுடனும் பகைவர்களை விரட்டிக் கொண்டு காட்டுக்குள் சென்றது வீரா. மாலை களைப்பாக வீடு திரும்பிய உடன், நான் தனி ஆளாக நின்று எதிரிகளை விரட்டி ஓட வைத்தேன், மற்ற விலங்குகள் எல்லாம் சும்மாவே நின்று வேடிக்கை பார்த்துட்டு இருந்த துங்க. தொடை நடுங்கி விலங்குகள். இந்நேரம் காடு முழுவதும் என் புகழ் பரவி இருக்கும். என்னுடைய ஆவேசத்தைப் பார்த்து காடே நடுங்கி விட்டது. நான் வீரர்களில் துணிச்சலான மாவீரன், இதைப்பற்றி என்ன நினைக்குற ராணி என்றது? என்னாங்க என்னைப் போய் கேட்கிறீர்கள். காடே உங்க புகழ் பரவி இருக்குது என்று சொல்கிறீர்கள். நான் சொல்ல என்ன இருக்கிறது என்றது ராணி பெருமையாக. தன் கணவன் வீரா செய்த வீர சாகசங்களை நினைத்து பெருமிதம் கொண்டது ராணி.

ஒரு நாள் பக்கத்து காட்டில் உள்ள ஓடையில் சுவைமிக்க புதிய வகை மீன் குஞ்சுகள் இருக்கின்றனவாம் என்று கேள்விப் பட்டது சாமா என்ற பெண் கழுதைப்புலி. இதைக் கேட்டதும் தங்கள் குட்டிகளை அங்கு கூட்டிச் செல்ல விருப்பப்பட்டது அனைத்து பெண் கழுதைப்புலிகளும். ஆண் கழுதைப்புலிகள் எல்லாம் புதிய உறைவிடம் தேடி சென்றிருந்தமையால் அவைகளை தொந்தரவு செய்ய விரும்பாத சாமா கழுதைப்புலி ஒரு முடிவு செய்தது. அதன்படி யாராவது ஒரே ஒரு வீர ஆண் புலி மட்டும் நம்முடன் வரட்டும் காவலுக்கு அழைத்து செல்வோம் என்று ஆலோசனை கூறியது சாமா. உடனே ராணி முன்வந்து அப்படி என்றால் ஆண்கூட்டத்திலேயே மிகப்பெரிய வீரன் என் கணவன் வீராதான், அவரையே காவலுக்கு அழைத்து செல்வோம் என்று கூறியது. மற்ற பெண் கழுதைப்புலிகள் இதை ஒத்துக்கொள்ளவே ராணி வீராவிடம் சென்று இதைக் கூறியது. ஆமாம் தேவைப்படும்போது மட்டும் இந்த வீராவின் வீரம் உங்களுக்கு ஞாபகம் வந்து விட்டது. மற்ற நாட்களில் என்னையும் என் வீரத்தையும் இந்த காடு மறந்து விடுகிறது என்று அலுத்துக்கொண்டே கிளம்பியது. வீராவின் துணையுடன் பக்கத்து காட்டுக்கு கிளம்பின பெண் கழுதைப் புலிகள் கூட்டம்.

பெண் கழுதைப் புலி கூட்டம் நடுவே வீரா மட்டும் தனியே வருவதைக் கண்ட பக்கத்து காட்டு சிங்கக் கூட்டம், கழுதைப் புலி கூட்டத்தை சுற்றிவளைத்தது. பகைவர்கள் சுற்றிவளைத்ததைக் கண்ட வீரா, பெண்கள் கூட்டத்தை நோக்கி விரைவாக மரங்களுக்குப்பின் சென்று மறைந்துகொள்ளுமாறு கட்டளையிட்டது. தானும் ஒரு மரத்திற்கு பின் சென்று மறைந்துகொள்ள முயன்றது. இதைக்கண்ட சிங்கக் கூட்டம் நகைத்தது. பெண் கழுதைப் புலிகளுக்கும் சிரிப்பையும் ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. சிங்கராசா கழுதைப்புலி கூட்டத்தில் இருந்து ஒரு பெண் கழுதைப்புலியை நோக்கி உன் பெயர் என்ன என்று வினவியது. அது வீராவின் மனைவி கழுதைப் புலி, எனவே தன் பெயரைக் கூறியது. அப்படியா எங்கள் கூட்டத்திலும் பெண்களுக்கு ராணி என்று பெயர் வைப்பது உண்டு. எனவே எங்கள் இனப் பெண்களின் பெயரை வைத்து உள்ள உன்னைக் கொல்ல எனக்கு மனம் வரவில்லை, தப்பித்துப் போய் விடு என்று கூறியது. இதைக் கேட்ட மற்ற பெண் கழுதைப்புலிகளும் தங்கள் பெயர் ராணி என்று கூறி தப்பித்துக் கொண்டன.

ராசா சிங்கத்திற்கு ஒரே வியப்பு, எங்கள் காட்டில் ஒவ்வொரு பெண் விலங்குகளுக்கும் வேறு வேறு பெயர் வைப்பது வழக்கம், ஆனால் உங்கள் காட்டில் உள்ள அனைத்து பெண் விலங்குகளுக்கும் ராணி என்ற ஒரே பெயரையே வைத்துள்ளனர் என்றது வியப்பாக. கடைசியாக வீராவை நோக்கி உன் பெயர் என்ன என்றது சிங்கராஜா. என் பெயரும் ராணிதான் என்றது வீரா. இதைக் கேட்ட சிங்கராஜாவிற்கு கோபம் வந்துவிட்டது. பெண்கள் அனைவருக்கும் தான் ராணி என்று பெயர் வைத்துள்ளனர். ஆண்களுக்குமா? என்றது கோபமாக. உடனே வீரா நான் ஆண் கழுதைப்புலி இல்லை. நான் பார்க்கத்தான் ஆண் போல் தோற்றம் அளிக்கிறேன். ஆனால் உண்மையில் பெண் என்றது. இதைக் கேட்ட அதன் மனைவி ஓடி வந்து, இல்லை சிங்கராஜா உண்மையில் இவர் தான் என் கணவர். காடெல்லாம் புகழ் பரவிய வீரர்களில் துணிச்சலான மாவீரன் வீரா என்றது. உடனே சிங்கராஜாவிற்கு சிரிப்பு வந்து விட்டது. உயிர் பயத்தில் உளறிய வீராவை நோக்கி உன்னைக் கொன்றால் எனக்கு இழுக்கு. ஓடிப் போ என்று விரட்டி விட்டது.

அன்று முதல் காடு வந்த வீரா தன்னை வீரன், மாவீரன் என்று சொல்வதில்லை. குகையில் இருந்து வெளிப்பட்டாலே மற்ற பெண் புலிகள் நகைத்தன. வெளியே தலைகாட்ட முடியவில்லை. தன் மனைவி ராணியிடம் இனி தான் வீரர்களில் துணிச்சலான மாவீரன் வீரா இல்லை, வேட்டை மிருகங்களில் துணிச்சலான வேட்டைக்காரன் இல்லை, சாதாரண ஒரு கழுதைப்புலிதான் என்று சொல்லி அனுப்பியது. அதில் இருந்து காட்டில் யாரும் வீராவைப் பார்த்து கேலியாக நகைப்பதில்லை. என்ன குட்டிகளா, வீராவைப் போன்று பொய்யாக தற்பெருமை செய்யக்கூடதல்லவா? உங்களுடை நற்செயல்களைப் பொறுத்து தன்னாலே புகழ் வரும். ஆகவே உங்கள் செயலில் மட்டும் கவனம் செலுத்துங்கள். நீங்கள் செய்தவைகளை பற்றி நீங்களே யாரிடமும் தற்பெருமையாகக் கூறாதீர்கள். அவர்களாகவே உங்கள் செயல்களைப் பற்றி பேசுவார்கள்.

## ஆங்கிலச் சொற்களை கண்டுபிடித்து வட்டமிடுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| sit |  | u | d | p | w | s | t |
| boat |  | r | h | w | d | i | r |
| moon |  | i | r | k | p | t | e |
| tree |  | a | t | a | o | b | e |
| berry |  | h | n | o | o | m | l |
| chair |  | c | y | r | r | e | b |

## விடுகதைகளும் விடைகளும்

• சுருங்கினால் எனக்கு அவன் அடக்கம். விரித்தால் நான் அவனுக்கு அடக்கம்.

குடை

• கால் ஆறு; சிறகு இரண்டு; கண் இரண்டும் கடுகுபோல; ஈயாடா இளிச்சவாயா. இன்னுமா தெரியவில்லை.

ஈ

• மரம் ஏறினால் வழுக்கும் காய் தின்றால் துவர்க்கும் பழம் தின்றால் இனிக்கும்.

வாழை

• ஓட்டமாய் ஓடும் உருண்டு உருண்டு ஓடும். பள்ளத்தைக் கண்டால் பாய்ந்து பாய்ந்து ஓடும்.

தண்ணீர்

• இந்தப் பிள்ளை பெரியவனானால், படிக்காமலே பலன் தருவான்.

தென்னம்பிள்ளை

• மஞ்சள் சேலை கட்டி, மங்கையர் பத்துப் பேர். கயிற்றைப் பிடித்துக் கொண்டு கடையிலே தொங்குகிறார்.

வாழைப்பழச்சீப்பு

முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன். ~ நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஓ! அரசியல் புள்ளினங்காள் ஐந்து ஆண்டுகள் கடந்தனவோ!

வானுயர்ந்த கோபுரங்கள் வழிபாட்டு அடையாளங்களாக இருப்பினும் அவை புறாக்களின் இருப்பிடங்களாகவும் உள்ளன என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆலயக் கோபுரங்களில் புறாக்களைத் தவிர வேறு எந்தப் பறவைகளும் தங்குவதில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

அதாவது ஆலயக் கோபுரங்களில் புறாக்கள் மட்டும் குடியிருப்பதற்கு இறைவன் ஏன் அனுமதி கொடுத்தான் என்று கேட்டால், மாடப் புறாக்கள் கற்பொழுக்கம் உடைய புள்ளினம்.

ஒருவனுக்கு ஒருத்தி; ஒருத்திக்கு ஒருவன் என்ற மிக உயர்ந்த கற்பொழுக்கத்தை மாடப் புறாக்கள் எஞ்ஞான்றும் கடைப்பிடிப்பவை.

எனவே இந்த உலகில் ஒழுக்கம் உடைய எவையும் வானுயர்ந்த கோபுரத்தில் வாசம் செய்யும் பேற்றைக் கொண்டுள்ளன என்பதை எடுத்தியம்பவே ஆலயக் கோபுரங்கள் புறாக்களின் வாழ்விடங்களாகவும் உள்ளன.

இவை அறிதலுக்கான சிறுகுறிப்பு.

இனி, விடயத்துக்கு வருவோம். இலங்கைப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி பொதுத் தேர்தல் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் வருவதற்கு முன்னதாகவே அரசியல் பட்சிகள் ஐந்து ஆண்டுகளுக்கு முன் வந்துபோன புலத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

ஓ! அரசியல் பட்சிகளே! ஐந்து ஆண்டுகள் கடந்து போயினவா?

நேற்றுப் போல் இருக்கிறது நீங்கள் கும்பிடு கோலத்தில் நம் வாசல் வரை வந்து போன நிகழ்வு. அதற்கிடையில் ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன.

ஓ! காலம் இவ்வளவு வேகமாய்க் கடக்கிறது என்று நினைத்தபோது, ஐந்து ஆண்டுகளில் எம் வாழ்வில் எந்த மாறுதலும் இல்லை என்பதாலும் காலம் கடந்து போனது தெரியாமல் போயிற்று போலும்.

ஆம், வருடத்துக்கு வருடம் முன்னேற்றம், அபிவிருத்தி, பொருளாதார உயர்வு என்று மாறுதல்கள் நடந்தால், ஐந்து ஆண்டுதான் கடந்து போனதா? மாறுதலின் அபரிதம் பத்து ஆண்டுபோல் இருக்கிறதே என்று எண்ணத் தோன்றும்.

ஆனால் இங்கு அழுத கண்ணீர் இன்னமும் ஓயவில்லை. காணாமல்போன பிள்ளைகளைத் தேடி அலையும் படலம் முடியவில்லை.

என் பிள்ளை எங்கோ இருக்கிறான் என்ற கனவு மட்டுமே உறக்கத்தைக் குலைப்பதாயின், காலம் கடந்து போனதை எங்ஙனம் புரிந்து கொள்வது.

ஆம், காலத்தின் கடப்பு அரசியல் பட்சிகளின் வருகையால் மட்டுமே உணரப்படுகிறது.

மற்றும்படி இருள் சூழ்ந்த தமிழர் வாழ்வில் இன்னமும் விடியலும் இல்லை. வெளிச்சமும் இல்லை.

## சீ.வீ.கே.சிவஞானம் காலத்தில் இடம்பெற்ற முறையற்ற செயற்பாடுகள் தீர்க்கப்படவில்லை

### யாழ் மாநகரசபை அமர்வில் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளராக இருந்த சீ.வீ.கே சிவஞானம் காலத்தில் இடம்பெற்ற முறையற்ற கட்டட நிர்மாண அனுமதிகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதாக யாழ் மாநகரசபை அமர்வில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

யாழ் மாநகரசபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்தச் சபை அமர்விலே சபை உறுப்பினர் ஒருவரால் குறித்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது

குறித்த விடயம் தொடர்பில் பதிலளித்த யாழ் மாநகர முதல்வர், தான் முதல்வராகுவதற்கு முன் மாநகரசபையில் இடம்பெற்ற முறைகேடான விடயங்கள் தொடர்பில் உரிய பதில்களை வழங்க முடியாதெனவும் தான் பொறுப்பேற்ற காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் அடையாளப்படுத்தப் பட்டால் பொறுப்புக் கூறுவேன் என பதிலளித்தார். (ம-10)

## வாக்குப் பலத்தை பயன்படுத்துக

### இமானுவேல் அடிகளார்

பாராளுமன்றத் தேர்தலில், தமிழ் மக்கள் தமது இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்கு தமது வாக்கு பலத்தினை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவேல் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார். (ம)

## திருடிய நகைகளை அடகுவைக்க சென்ற இரு யுவதிகள் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற திருட்டு சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரால் இரு யுவதிகளை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப் பாட்டுக்கமைய வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பிரனீத் திஸாநாயக்க தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளின் அடிப்படையில் நேற்று மாலை வவுனியாவில் அடைவு வைக்கும் இடத்தில் அடைவு வைப்பதற்காக நகைகளுடன் சென்ற 23, 26 வயதுடைய இரு யுவதிகளை காப்பு, கைச்சங்கிலி, மோதிரம் என்பவற்றோடு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் வவுனியா பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-299)

## ஐ.தே.க பிளவுகள் இல்லாமல் பொதுத் தேர்தலில் போட்டியிட

### சஜித்துடன் தொடர்ந்து பேச்சு நடத்தப்படும்-ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி பிளவுகள் இல்லாமல் பொது தேர்தலில் போட்டியிடும் வகையில் பிரதி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் தொடர்ந்தும் பேச்சு நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று கட்சியின் அமைப்பாளர்கள் மத்தியில் அவர் இதனைக்குறிப்பிட்டார்.

ஏற்கனவே யானை சின்னத்தில் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய தேசிய கட்சி போட்டியிடவேண்டும் என்று ரணில் தரப்பு வலியுறுத்தி வருகின்ற நிலையில் யானை சின்னத்தை பொதுத்தேர்தலுக்காக வாடகைக்கு தருமாறு சஜித் பிரேமதாச தரப்பு கோரிவருகிறது.

இந்தநிலையில் இன்னமும் ரணில்-சஜித் தரப்பு மோதல் முடிவுக்கு வரவில்லை. இதனையடுத்து நேற்று கூடிய ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர்கள் யானை சின்னத்திலேயே பொதுத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றும் எனினும் கட்சியில் பிளவுகள் ஏற்படக்கூடாது என்றும ஏகமனதாக தீர்மானத்தை மேற்கொண்டனர். (ம)

## தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் யாழில் அடுத்த வாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 11-17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இடம்பெறவுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்

யாழ் மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலக பகுதிகளையும் உள்ளடக்கிய பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் குறித்த திட்டம் அமுல்படுத்தப்படும்

கடந்த 2019 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 857 பேர் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் 03 பேர் உயிரிழந்தனர்

இவ்வாண்டு தை மற்றும் மாசி மாத இரு காலப்பகுதிகளில் ஆயிரத்து 927 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன் ஒருவர் உயிரிழந்தார்

ஆகவே டெங்கு நோய் தொடர்பில் விழிப்பாக இருக்கும் பொருட்டு யாழ் மாநகரசபை,கோப்பாய் மற்றும் நல்லூர் பிரதேசங்களில் வாரத்தில் ஏழு நாட்களும் வேலணை, காரைநகர், மருதங்கேணி பிரதேச செயலகங்களில் வாரத்தில் ஐந்து நாட்களும் குறித்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படும். (ம-10)

## யாழ் மாநகர சபையில் பனை ஓலை வெட்டக்கூடிய தொழிலாளர் இல்லை

### முதல்வர் இமானுவேல் ஆனல்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையில் பனைமரத்தில் ஏறி ஓலை வெட்டக்கூடிய அனுபவமான தொழிலாளர்கள் இல்லை என நேற்றைய தினம் இடம்பெற்ற சபை அமர்வில் யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் தெரிவித்தார்

யாழ் மாநகரசபையில் சம்பளம் பெறுகின்ற தொழிலாளர்கள் இருக்கும் நிலையில் யாழ் நகரப்பகுதியில் உள்ள பனைமர ஓலைகளை வெட்டுவதற்கு ஏன் 1200 ரூபாய் வழங்குகிறீர்கள் எனச்சபை உறுப்பினர் ஒருவர் முதல்வரை நோக்கி கேள்வி தொடுத்திருந்தார்.

இதன்போது பதிலளித்த முதல்வர், கடந்த காலங்களில் மாநகர தொழிலாளர்களை நியமிக்கும் போது உரிய வேலைகளைச் செய்வோரைத் தெரிவு செய்து உரிய வேலைகளை வழங்கியிருக்க வேண்டும்

மாநகரசபையில் உள்ள தொழிலாளர்களில் பனைமரத்தில் ஏறி முறையாக ஓலை வெட்டத் தெரிந்தவர்கள் இல்லாத நிலையில் வெளி ஆட்களை பயன்படுத்தி குறித்த வேலையைச் செய்ததாக அவர் மேலும் தெரிவித்தார் (ம-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில முகத்தாங்குளம் 2ம் வட்டாரம், சாளம்பைக்குளம், பகல அளுத்வத்த கிராமம், கோவில்புதுக்குளம் கிராமம், கிறிட்டிலிருந்து புதிய பேரூந்து தரிப்பிடம் வரை, பூந்தோட்டம், மகா றம்பைக்குளம், காத்தார்சின்னக்குளம், கூமாங்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும, மன்னார் பிரதேசத்தில இசைமழைத்தாழ்வு, நரிக்காடு, வட்டுபித்தன்மடு,புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும்.

## ஆன்மீகச் சிந்தனைகள்

### மாளிகையில் வாழலாம்

❖ சிறியவர் என்று யாரையும் அலட்சியமாக நினைக்கக் கூடாது. உயர்ந்த அரிசி, எளிய உமியின் துணை கொண்டே, சாதாரண மண்ணில் முளை விடுகிறது.

❖ ஒருவன் தன்னைக் காக்க விரும்பினால், முதலில் சினம் காக்க வேண்டும்.

❖ மற்றவர்களுடைய பொருளை கவர்ந்து கொள்ள கனவிலும் நினைக்கக் கூடாது.

❖ நியாயம் அல்லாத வழி சேர்ந்த பொருள் நிலைப்பது இல்லை. உழைத்து உண்ணும் வாழ்க்கையே உயர்ந்தது.

❖ போதும் என்ற மனதுடன் வாழ்பவனே, மகிழ்ச்சி என்னும் மாளிகையில் நுழையும் தகுதி பெறுகிறான்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

கால் தடுமாறினால் சமாளித்துக் கொள்ளலாம். நாக்குத் தவறினால் மீளவே முடியாது.

-பெஞ்சமின்ஃ பிராங்க்ளின்

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணம் ஓல்ட்கோல்ஸ் அணி முன்னிலையில்









ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 11 ஆவது ஆண்டாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தேர்வு தெரிவிற்கு, 01.01.2020 இல் இருந்து 29.02.2020 வரை நடைபெற்ற 14 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஒல்ட்கோல்ஸ் அணி 7 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றியும் ஒரு போட்டி முடிவில்லாமலும் 3 போட்டிகளில் தோல்வியுமடைந்து 33.96 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்திலும் சென்றலைட்ஸ் அணி 4 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டிகளில் வெற்றியும் 2 போட்டிகளில் தோல்வியுமடைந்து 22.79 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் ஏ.பி.அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்றும் ஒரு போட்டியில் தோல்வியுமடைந்து 20.98 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் யாழ்.பல்கலைக்கழக அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டியில் வெற்றியும் ஒரு போட்டி சமநிலையிலும் ஒரு போட்டியில் தோல்வியுமடைந்து 20.22 புள்ளிகளைப்பெற்று 4 ஆம் இடத்திலும் ஜொலிஸ்ரார் அணி 4 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றியும் ஒரு போட்டி முடிவில்லாமலும் 2 போட்டியில் தோல்வியுமடைந்து 16.97 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்திலும் ரி.சி.சி.அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றியும் 2 போட்டிகளில் தோல்வியுமடைந்து 10.43 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்திலும் கே.சி.சி.சி. அணி 2 போட்டியில் பங்கு பற்றி ஒரு போட்டி சமநிலையிலும் ஒரு போட்டியில் தோல்வியுமடைந்து 5.74 புள்ளிகளைப் பெற்று 7 ஆம் இடத்திலும் உள்ளனர். (க)

# 1500 மீற்றர் ஓட்டப் போட்டி வடமாகாணத்துக்கு மூன்றாமிடம்




தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம்தோறும் நடத்துகின்ற தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் 31 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா கடந்த 27 ஆம் திகதி வடமத்திய மாகாண விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

அந்த வகையில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற 20 வயதுக்குட்பட்ட பிரிவில் 1500 மீற்றர் ஓட்ட நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சசிகுமார் சரணியா 3 ஆம் இடத்தினை பெற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளதோடு வடமாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (க)

# தேசிய இளைஞர் விளையாட்டு விழா வடமாகாண வீரர்கள் பிரகாசிப்பு





31 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 10,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார் வவுனியாவைச் சேர்ந்த க.நிசோபன்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம்தோறும் நடத்துகின்ற தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் 31 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா கடந்த 27 ஆம் திகதி வடமத்திய மாகாண விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது. அந்த வகையில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற 20 வயதுக்கு கீழ்பட்ட ஆண்களுக்கான பிரிவில் 10,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் 10,000 மீற்றர் தூரத்தை 35:16:10 நிமிடத்தில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தை பெற்று வவுனியாவை சேர்ந்த க.நிசோபன் வவுனியா மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். இதேவேளை கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற 20 வயதுக்கு கீழ்பட்ட பெண்களுக்கான பிரிவில் 5000 மீற்றர் வேகநடைப் போட்டியில் 5000 மீற்றர் தூரத்தை வேகநடையாக 32:21:42 நிமிடத்தில் ஓடி முடித்து இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார் வவுனியாவைச்சேர்ந்த ஜெ. தனுசியா. வவுனியா மாவட்டமானது தேசிய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கபடி போட்டியில் 3 ஆம் இடத்தையும் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது கொக்குவில் இந்து அணி







யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் எண்ணக்கருவிற்கு அமைவாக யாழ்ப்பாணப் பகுதியில் கடமை புரிகின்ற இராணுவ வீரர்கள் மற்றும் வடக்கு பிரதேசங்களில் வாழ்கின்ற இளைஞர்கள் இடையேயான நட்புறவு மற்றும் புரிந்துணர்வினை வலுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு 512 ஆவது படைப் பிரிவுத் தலைமையகத்தின் வழிகாட்டலின் கீழ் கூடைப்பந்து சுற்றுப் போட்டியானது இடம்பெற்று அதனுடைய இறுதிச் சுற்றானது கடந்த 25 ஆம் திகதி யாழ்.கூடைப்பந்து விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இக் கூடைப்பந்து சுற்றுப் போட்டிக்காக யாழ்.பிரதேசத்தில் உள்ள 8 பாடசாலைகளிலுள்ள கூடைப்பந்து அணிகளைத் தெரிவு செய்து அவற்றுக்கான சுற்றுப் போட்டிகள் இடம்பெற்று அவற்றில் இறுதிப்போட்டிக்காக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மற்றும் கொக்குவில் இந்து கல்லூரி தெரிவு செய்யப்பட்டு இரண்டுக்கும் இடையேயான இறுதிச்சுற்றில் கொக்குவில் இந்து கல்லூரி சம்பியானது.

இந் நிகழ்வின் போது யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய, வடமாகாண கல்வி பனிப்பாளர், 51 மற்றும் 55 ஆவது படைத் தலைமையங்களின் தளபதிகள், இராணுவ உயரதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க)

## ஜெனிவா கூட்...

வைரஸ் தாக்கத்தின் காரணமாக ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் தற்காலிகமாக இடைநிறுத் தப்படும் என செய்திகள் வெளியாகி யிருந்தன.

இந்தநிலையில், கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நட வடிக்கைகளை உள்வாங்கியுள்ள ஐ.நா மனித உரிமை சபை, அதன் வழிகாட்டுதலுக்கு அமைய தாமும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுத்துள்ளதாக தெரிவித் துள்ளது.

தற்காலிகமான இந்த முடிவு எதிர்வரும் 13ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பதற்றங்கள் நீடிக்கின்றது...

இலங்கையின் நிலவரங்கள் குறித்து, ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில், சமர்ப் பித்துள்ள அறிக்கையில், மத சுதந்திரம் அல்லது நம்பிக்கை சுதந் திரம் குறித்த ஐ.நா சிறப்பு அறிக்கை யாளர் அகமட் ஷகீட் கவலை வெளி யிட்டுள்ளார்.

இலங்கைக்கு 2019 ஒகஸ்ட் 15 தொடக்கம் 26ஆம் திகதிவரை மேற்கொண்டிருந்த பயணத்தில் அவதானிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கி அவர் இந்த அறிக் கையை தயாரித்துள்ளார்.

இலங்கையில் 2015ஆம் ஆண்டிலிருந்து சாதகமான முன் னேற்றங்கள் இருந்த போதிலும் கூட, இன மற்றும் மத சமூகங்களி டையே பதற்றங்கள் நீடித்திருக் கின்றன. குறிப்பாக பொறுப்புக் கூறல் மற்றும் நீதியை உறுதிப் படுத்துவது, மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதில், குறிப்பிடத்தக்க இடைவெளிகள் உள்ளன.

நவம்பர் 2019 ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது, ஐ.நாவுடனான கடந்த அரசுகளின் உறுதிமொழிகளை ஏற்றுக் கொள் ளப் போவதில்லை என்றும், போருக்குப் பிந்திய பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக மனித உரிமைகள் சபையில் அளித்த உறுதிப்பாட்டை மதிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்ட கருத்து குறித்து பலரும் கவலை தெரிவித்தனர்.

இலங்கை பழைய குற்றச்சாட்டு களுக்கு ஆளாகாமல் முன்னோக் கிப் பார்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

ஜய
சீட்டிழுப்பு இலக்கம் 567
03/03/2020
T 36 47 61 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,294,610
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 901
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.03.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,600,790/-
வெற்றி இலக்கங்கள் 22 26 55 64 F

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1652 சீட்டிழுப்பு திகதி 03/03/2020
வெற்றி இலக்கங்கள் 19 32 53 66 Y
அடுத்த ஜக்பொட் ரூ. 47,735,948
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 03.03.2020 வெற்றி வாரம் 2787 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் மேடம் 02 10 44 53
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,404,816
ரூ.500 பரிசுக்குரிய 4 0 6 4
ரூ.100 பரிசுக்குரிய 1 2 4
டபள் சான்ஸ் விசேட இல.
04.03.2020 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

## வடக்கு மக்...

வரை அதிகரிக்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். விசேடமாக வடக்கு மற்றும் வட மத் திய மாகாண மக்கள் எதிர் கொண் டுள்ள இந்த அழுத்தத்தில் இருந்து அவர்களை விடுவிப்பதற்காக கூட்டு றவு கிராமிய வங்கிகள் மற்றும் சிக்கன கடன் சங்கங்கள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங் கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

தற்போது வழங்கப்படும் இந்த குறைந்த வட்டியிலான கடன் தொகையின் எல்லையை அதிகரிக்கு மாறு பல்வேறு தரப்புகளும் நிதிய மைச்சிடம் வேண்டுகோள் விடுத்தி ருந்தன.

6 மாவட்ட செயலகங்கள் ஊடாக தற்போது நடைமுறைப் படுத்தப்படும் இந்த வேலைத்திட் டம் தொடர்பில் மாவட்ட செயலாளர் கள், மக்கள் பிரதிநிதிகள், மற்றும் பொதுமக்கள் விடுத்த வேண்டு கோளுக்கு செவிசாய்த்து இதனை மேலும் ஒழுங்குபடுத்துவதற்கு பிரதமர் தீர்மானித்துள்ளார்.

குறிப்பாக வட மாகாணத்திற் கென 292 மில்லியன் ரூபாயை யும், வடமத்திய மாகாணத்திற்காக 250 மில்லியன் ரூபாயையும் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில், நுண்நிதி கடன் நெருக்கடியினால் 14 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ள னர். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சர் என்ற வகையில் மேற்கொண்டுள்ள இந்தத் தீர்மானம் காரணமாக, மேலும் பெரும் எண் ணிக்கையான மக்கள் கடன் பெறு வதற்கு தகுதிபெறவுள்ளனர். (ம)

## 281 கிலோ கிராம்...

மோசடிக்காரர்களின் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக கடற் படை தெரிவித்துள்ளது.

வடக்கு கடற்படை கட்டளை யின் கடற்படையினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப் பாணம் நாகர்கோவில் கடற் பிராந்தியத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டது.

இதன்போது கடலில் மிதந்து வந்த சில கேரளக் கஞ்சாப் பொதி கள் கடற்படையினரால் மீட்கப்பட் டன. இதனையடுத்துக் கடற்படை யினர் நடத்திய தேடுதலின் போது சுமார் 281 கிலோகிராம் கேரளக் கஞ்சாப் பொதிகள் தம்மால் மீட் கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, மீட்கப்பட்ட கேர ளக் கஞ்சாப் பொதிகள் யாழ்ப்பா ணம் பொலிஸ் போதைப் பொருள் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது. எனினும் மேற்படி சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப் படவில்லை. (ம-18.60)

## இளம் கர்ப்பிணி...

இளம் கர்ப்பிணிப் பெண் நேற்று முன்தினம் காலையிலிருந்து கடு மையான வயிற்று வலியால் அவ திப்பட்டுள்ளார்.

இருப்பினும் அது சிறுநீர் தொற்று காரணமாக ஏற்பட்ட வயிற்று வலி என நினைத்து எவ ரும் அதனைப் பொருட்படுத்த வில்லை என தெரிவிக்கப்படுகின் றது.

இந்த நிலையில் பிற்பகல் திடீ ரென மயங்கி விழுந்தவரை தரும புரம் வைத்தியசாலையில் சேர்ப் பித்தபோது அவரது இதயம் இயக் கத்தை நிறுத்தியிருந்தது.

தருமபுர வைத்தியசாலை ஊழியர்களால் கடுமையாக முயற் சித்து இதயத்தை மீள இயங்க வைத்து கிளிநொச்சி வைத்திய சாலைக்கு அனுப்பியுள்ளனர். எனினும் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த அதிக இரத்தப்போக்கு காரணமாக அவர் உயிரிழந்துள்ளார்.

கருவானது கர்ப்பைக்கு வெளியே தங்கியதால் வயிற்றறையில் ஏற் பட்ட திடீர் இரத்தப்போக்கே இந்த மரணத்துக்கு காரணம் என வைத் தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (ம-100.315, 350)

## வவுனியாவில்...

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நேற்று மாலை 4.00 மணியள வில் வவுனியா பகுதியில் விசேட அதிரடிப் படையினரினால் மேற் கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது வேப்பங் குளம் பகுதியில் வாளுடன் நடந்து சென்ற 24, 26 வயதுடைய இரு வரை கைது செய்த விசேட அதிரடிப் படையினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் அவர்களிடமிருந்து விசாரணை கள் இடம்பெற்று வருவதாக வும் பொலிஸார் தெரிவித்த னர். (ம-299)

## தேர்தல் சட்டங்...

நேற்றையதினம் ஆணைக் குழுவின் பிரதிநிதிகளுடன் கண் டிக்கு சென்ற அவர் மகாநாயக் கர்களை சந்தித்தபின் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை அரசியல் கட்சி கள் மற்றும் வேட்பாளர்களின் பேஸ்புக் பக்கங்களை கண்காணிக் கும் நடவடிக்கையை ஆரம்பித் துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித் துள்ளது. (ம)

## 6 1/2 பவுண் தாலி...

அருகில் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது. மிருசுவில் வடக்குப் பகுதி யைச் சேர்ந்த 55 வயதுடைய பெண் மணி ஒருவர் யாழ்ப்பாண நகரத்திற்கு போய் விட்டு வீடு திரும்பும் போது பஸ்ஸில் வந்து இறங்கி நடந்து சென்ற போதே மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் கழுத் தில் இருந்த 6 1/2 பவுண் தாலிக் கொடியை அறுத் துக்கொண்டு தப்பி யோடியுள்ளனர் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கொடி காமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-114)

## அவதான...

சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத் துள்ளது.

குறிப்பாக சிறு குழந்தைகள், முதியவர்கள், நீண்ட கால இதய நோய்க்குள்ளானவர்கள் மற்றும் வெட்டவெளிகளில் தொழில் புரிவோர் என பலர் இந்த வெப்பமான கால நிலையால் வெகுவாக பாதிக் கப்படு வர் என தெரிவித்துள்ளது. (ம)

## வெடிமருந்து வைத்திருந்த குற்றச்...

வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 பேரை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறைப் பகுதியில் உள்ள வீடொன் றில் வைத்து நேற்று இரவு பயங்கர வாத விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ள னர்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 20 வயது முதல் 24 வயது டைய இளைஞர்களையே பயங் கரவாத தடைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரை யும் யாழ்ப்பாணத்தில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவி னரின் அலுவலகத்தில் தடுத்து வைத்திருப்பதுடன் நால்வரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் முன்னெ டுத்து வருகின்றனர். (ம-101)

## வீதிக்கு குறுக்கே ஓடிய சிறுவன்...

சேர்ந்த ஜீவன் அபிசரன் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

புன்னாலைக்கட்டுவன் பகுதி யில் வசித்து வரும் குறித்த சிறுவன் நேற்று முன்தினம் தனது வீட்டிற்கு முன்பாக உள்ள வீட்டில் தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்துள்ளான். அப்போது அவரின் தாயார் வீட்டுக்கு வரு மாறு அழைத்துள்ளார். தாயார் கூப்பிட்டதை அடுத்து சிறுவன் வீட்டை நோக்கி வீதியில் ஓடி வந்துள்ளார். அப்போது வீதியில் வேகமாக பயணித்துக் கொண் டிருந்தார் ஹையஸ் வாகனம் சிறு வன் மோதிச் சென்றுள்ளது. இதில் படுகாயம் அடைந்த அவர் உடனடி யாக தெல்லிப்பழை வைத்திய சாலை கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் இரவு 9.00 மணியளவில் சிறுவன் உயி ரிழந்துள்ளான். இந்த இறப்பு தொடர்பான விசாரணை களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். இந்த விபத்து சம்பவம் தொடர்பில் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

இதேவேளை கணவனை பிரிந்து வாழ்ந்து வரும் குறித்த குடும்பத்தில் மூன்று பிள்ளைகள் இருந்த நிலையில் ஏற்கெனவே ஓர் ஆண் குழந்தை இறந்து விட்டது. தற்போது இந்த சிறுவனும் உயி ரிழந்துள்ளான். தற்போது மூன்று பிள்ளைகளில் ஒரு பிள்ளையுடன் குறித்த குடும்பத்தலைவி கண வனை பிரிந்த நிலையில் மிகுந்த துன்பத்துக்கு உள்ளாகியுள்ளதாக உறவினர்கள் கவலை வெளியிட் டுள்ளனர். (ம)

செவன
திகதி 03/03/2020
சீட்டிழுப்பு இலக்கம் 267
C 03 23 30 39

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 03-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2410
Q 51 52 57 63

மஹஜன சம்பத
திகதி 03/03/2020
சீட்டிழுப்பு இலக்கம் 4127
Y 6 4 1 3 2 2

நீரோகா
திகதி 03/03/2020
சீட்டிழுப்பு இலக்கம் 670
மிதுனம் 09 52 63 65

# மன்னாரில் இரு இடங்களில் வெடிபொருட்கள் மீட்பு

(மன்னார்)

மன்னாரில் இரு இடங்களில் இராணுவத்தினரால் வெடி பொருட்கள் மற்றும் வெடி மருந்துகள் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் சௌத்பார் கடற்கரை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 2 கிலோ வெடி மருந்து மற்றும் அதற்கு பயன்படுத்தும் 27 குச்சுகளும் நேற்று திங்கட்கிழமை மாலை இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் குறித்த பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது குறித்த வெடி மருந்து மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட வெடிமருந்து மற்றும் குச்சுகள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் பள்ளிமுனை கோந்தை பிட்டி கடற்கரை யோர பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சக்தி வாய்ந்த வெடிபொருள் ஒன்றை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

அப்பகுதியில் உள்ள பற்றை ஒன்றில் இருந்து குறித்த வெடி பொருளை மீட்டுள்ளனர். மேலதிக நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-285)

# நல்லூர் ஆலய சூழலில்

## இரு நிரந்தர வளைவு அமைக்க

### மாநகர சபையில் அனுமதி கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் இரு நிரந்தர வளைவு அமைக்க யாழ். மாநகர சபையில் நேற்று திங்கட்கிழமை அனுமதி கோரப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் மகிமையை மேலும் சிறப்படைய வைக்கும் நோக்குடனும் வருகை தரும் பக்தர்களுக்கு ஆலயத்தை அடையாளப்படுத்தும்நோக்குடனும் குறித்த வளைவு அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. (ம-10)


**பணியாளர்கள் தேவை**

யாழ்.வடமராட்சியில் உள்ள பிரபல அச்சகம் ஒன்றுக்கு Type Setting (ரைப்செற்றிங்) Binding (பைண்டிங்) வேலை தெரிந்தவர்கள் (பழகவிரும்புபவர்கள்) தேவை.

தொடர்புகளுக்கு:- (C-9400)

0768158591, 0212260055

**பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம்**

வியாழக்கிழமை காலை 10 மணிமுதல் (05.03.2020) விநியோகம் செய்யப்படும்

விலை- ரூ.500 மட்டும்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல.04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6693 (C-9407)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS (C-8785)

**மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை**

5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது

| | |
|---|---|
| பிரான்ஸ் | -ரூ.750/ரூ.700 |
| ஜேர்மனி | -ரூ.750/ரூ.700 |
| டென்மார்க | -ரூ.750/ரூ.700 |
| கொலன்ட் | -ரூ.750/ரூ.700 |
| பெல்ஜியம் | -ரூ.750/ரூ.700 |
| இத்தாலி | -ரூ.750/ரூ.700 |
| லண்டன் | -ரூ.700/ரூ.575 |

கனடா மற்றும் லண்டனுக்கு பழங்கள் மரக்கறி வகைகளை வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு அனுப்பிட தொடர்புகொள்ளவும்.

முகவர்களாக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும் (C-9390)

கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும், யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும் பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500 | 72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500 |

**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

**அருள்**

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9381)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

**D. Sam in நாற்று மேடை**

இருவாரத்திற்கு ஒரு முறை

செவ்வாய்க்கிழமைகளில்

4.00 - 5.00

DMI JAFFNA (9379)

**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இருந்து இந்திய விபூதி 1kg பக்கற்றினை மொத்தமாக (Rs.100) இற்கும் சில்லறையாக (Rs.110) இற்கும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் விபூதி, சந்தனம், குங்குமம், 25g பக்கற் முதல் 1kg பக்கற்வரை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- (C-9398)

**சிவா நறுமணப்பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சத்திரச்சந்திக்கு அருகாமையில்) தொ.பேசி: 0212222567

**STUDY IN TAMILNADU WITH 100% SCHOLARSHIP FOR SRI LANKAN STUDENTS**

Scholarship Entrance Exam on March 07th 2020

Application Closing on March 05th 2020

For Registation Contact: 076 817 0077 | 021 492 7780

B.E. / B.Tech — UGC Recognized University Awarded Degree

AERONAUTICAL ENGINEERING
CIVIL ENGINEERING
MECHNICAL ENGINEERING
ELECTRONICS & COMMUNICATION ENGG.
COMPUTER SCIENCE ENGINEERING
INFORMATION TECHNOLOGY

Excel TAMILNADU, INDIA (C-9401)

POLYTECHNIC
AUTO | MECH
CIVIL | ECE | EEE

COMMERCE & SCIENCE

B.A. English, Tamil | B.C.A. | B.Com. | B.Com-CA
B.B.A. | B.Com. (AF) | B.Sc., Computer Science | Microbiology
Textile & Fashion Designing | Vis.com. | Mathematics | Costume Design & Fashion | Physics | Information Technology | Bio-chemistry



ADMISSION OFFICE கற்பகவனம், 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில்)


**கண்ணீர் அஞ்சலி**



எமது வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த

திருமதி சுகதா மோகனராஜா அவர்களின் தாயார்

**பவானி (ரதி) ஏகாம்பரம்**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி!


வலம்புரிக் குடும்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்
# மேல்மாகாண பிரபல பாடசாலை

நேரம்: 45 நிமிடம் வினாப்பத்திரம்- 01

01) சோடிச் சொற்களுக்குப் பொருத்தமான உருவினைத் தெரிவு செய்க?
நிழல்- தூய காற்று

1)  2)  3) 

02) தம்மிடையே குறைவான தொடர்பைக் காட்டும் உருவினை தெரிவு செய்க?

1)  2)  3) 

கீழே தரப்பட்டுள்ள கணிதச் செய்கையை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள். காண்க.

| | | |
|---|---|---|
| C | A | C |
| C | A | A |
| A | A | B |
| 11 | 9 | 9 |

03) இச்செய்கையில் B இன் பெறுமானம்
1) 2 2) 4 3) 3




04) A+C+A இன் பெறுமானம்
1) 8 2) 10 3) 9

05) A-செம்பகம் நத்தைகளை பிடித்து உண்டது
B- நரி இலை குழைகளை மென்று உண்டது
1) B சரி A பிழை 2) A சரி B பிழை 3) A,B சரி

06) இரு பக்கங்களும் சமனாக எழுதப்பட்டுள்ள விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.
1) ABCD85OF = AB89CDEO
2) GHIL976D = GHIL976D
3) RQST875A = RQSU879B


07) பின்வரும் கூற்றுக்களில் எப்போதும் உண்மையான கூற்றினைத் தெரிவு செய்க.
1) காலையில் சூரியன் மேற்கே உதிக்கும்
2) மழைவரும் முன்னர் ஈசல் பறக்கும்
3) ஞாயிற்றுக்கிழமை பாடசாலை நடைபெறும்

08) பின்வரும் உருக்களில் பொருத்தமற்ற உருவினை தெரிவு செய்க?

1)  2)  3) 



09) 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19 இங்கு எழுதப்பட்டுள்ள எண்களில் ஒன்று எழுதப்பட்டுள்ள தடவைகளின் எண்ணிக்கை யாது?
1) 11 2) 10 3) 12

10) பின்வரும் உருவினை அவதானித்து விடையினைத் தெரிவு செய்க?



1) வட்டங்கள் 1 முக்கோணி 5 சதுரம் 2
2) வட்டங்கள் 2 முக்கோணி 6 சதுரம் 2
3) வட்டங்கள் 2 முக்கோணி 8 சதுரம் 3

11) அப்பா கடையில் இருந்து பொருட்கள் வாங்கி வந்தார். அதனை அரை வாசி எடுத்து ஒரு பகுதியை தம்பிக்குக் கொடுத்தார். மீதி அரைவாசியை மீண்டும் இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை எனக்குத் தந்தார். எனக்குத் தந்த பகுதியை காட்டும் உரு எது?

1)  2)  3) 

12) ''அனுமதி கிடைத்தவுடன் கையிலிருந்து தப்பிச் சென்ற பறவையைப் போல ஓடினான்'' இங்கு கையிலிருந்து தப்பிச் சென்ற பறவை என்பதன் கருத்து?

1) மிகவும் கஷ்டப்பட்டு ஓடினேன்
2) மிகவும் வேகமாக ஓடியது
3) மிகவும் மெதுவாக ஓடியது

13) கீழ்வருவனவற்றில் குறித்தவொரு ஒழுங்கில் அமைந்திருப்பது?
1) m cm mm km
2) km cm mm mm
3) mm cm m km


14) "இளங்காலச் செயல்களில் எதிர்கால வாழ்வு புலப்படும்" எனும் கருத்தை உணர்த்தும் பழமொழி

1) விளையும் பயிரை முளையிலே தெரியும்
2) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
3) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்




15) சரியாக ஒழுங்குபடுத்தி எழுதும்போது அமையும் விடையைத் தெரிவு செய்க?

A- அத்துடன் அழகான கருத்துக்களைக் கொண்டதாகும்
B- திருவள்ளுவர் மிகச் சிறந்த புலவர்
C- அவர் திருக்குறள் என்னும் நூலை இயற்றினார்
D- திருக்குறள் ஈரடிகளைக் கொண்டுள்ளது

1)ADCB 2)BCDA 3)BDCA

16) 

வட்டவடிவமான கடதாசியை நான்காக மடித்து ஒரு பகுதி வெட்டி அகற்றப்பட்டதை படத்தில் காட்டப்பட்டுள்ளது.
கடதாசியை விரிக்கும் போது தோன்றும் விதம்?

1)  2)  3) 

கீழே உள்ள தரவைக் கொண்டு 17, 18 ஆகிய வினாக்களுக்கு விடை தருக?

| | |
|---|---|
| அப்பிள்பழம் தோடம்பழம் | ரூபாய் 50.00 |


| | |
|---|---|
| மாம்பழம் | ரூபாய் 20.00 |




| | |
|---|---|
| தோடம்பழம் மாம்பழம் | ரூபாய் 30.00 |

17) அப்பிள் பழம் ஒன்றின் விலை யாது?
1) ரூபாய் 50.00 2) ரூபாய் 40.00 3) ரூபாய் 30.00

18) பழங்களில் விலை குறைந்தது எது?
1) அப்பிள் 2) மாம்பழம் 3) தோடம்பழம்

19) பின்வரும் உருவை அவதானித்து விடை தருக?





 (1)  (2)  (3)

20) ஒரு மரத்தில் கிளிகள் பத்து காணப்பட்டன. அவற்றின் கால்களினதும் தலைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது?
1) 20 2) 30 3) 10



21) சுமணன் தனது பிறந்த மாதம் தொடர்பாக ''நான் பிறந்த மாதம் 30 நாட்களைக் கொண்டதாகும். அதனை ஆங்கிலத்தில் எழுதும் போது நான்கு எழுத்துக்கள் பயன்படுத்தப்படும்'' என்று கூறினான் எனின் அந்த மாதத்தை தெரிவு செய்க?

1) மாசி 2) கார்த்திகை 3) ஆனி

பின்வரும் உருக்களை அவதானித்து வினாக்களுக்கு விடை காண்க?





22) BALL என்பதனை குறியீட்டில் தருக?

1)  2) 

3) 

23) பகுதி எண் 3 ஐயும் தொகுதி எண் இரண்டையும் கொண்ட பின்ன மொன்றின் சமவலுப் பின்னம்?

1) 2/3 2) 4/6 3) 3/2

24)  உருவினைக் கொண்டு கீழ்வருவனவற்றிற்கு விடை தருக?

நிறந்தீட்டப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?


1) 2/8 2) 4/16 3) 1/4

25) 1/2 பங்கு நிழற்றுவதற்கு இன்னும் எத்தனை சதுரங்கள் நிழற்ற வேண்டும்?

1) 2 2) 4 3) 1

26) 500 இன் 2/5 பங்குடன் 400 ஐக் கூட்டினால் வரும்

1) 600 2) 200 3) 400

27) 


எனவும் தரப்பட்டுள்ளது.

 இதற்குப் பொருத்தமான பெறுமானம்


1) 17 2) 29 3) 19

28) பயணத்தை ஆரம்பிக்கும் போது ஒரு வாகனத்தின் மாணியில் பின் பதியப்பட்டிருந்தன.

| 0 | 1 | 2 | 3 | 9 | 9 | 0 | km 20 km சென்ற பின் மாணியில் பதிவாகும் வேகம்

1) | 0 | 1 | 2 | 3 | 9 | 1 | 0 | km 2) | 0 | 1 | 2 | 3 | 1 | 1 | 0 | km

3) | 0 | 1 | 2 | 4 | 1 | 1 | 0 | km

29)  இவ்வுருவில் உள்ள முக்கோணிகளினது எண்ணிக்கை?


1) 12 2) 6 3) 10

30) ஒரு பஸ் வண்டியில் 52 பிரயாணிகள் பயணம் செய்யக் கூடியது எனின் 125 பிரயாணிகள் கல்விச் சுற்றுலா செல்வதற்கு எத்தனை பஸ் வண்டியை ஒழுங்கு செய்ய வேண்டும்?

1) 2 2) 3 3) 5


31) 50 தொடக்கம் 55 இற்கு இடையிலான 5 களின் கூட்டுத்தொகை

1) 25 2) 30 3) 35

32) 


B பகுதிகளில் 14 மாங்கன்றுகள் நட முடியுமாயின் C பகுதியில் எத்தனை கன்றுகள் நடலாம்.

1) 30 2) 60 3) 45

33)  இத்தராசின் இருபக்கங்களும் சம நிலையில் இருக்குமாயின் பூசணிக் காயின் நிறை என்னவாகும்?


1) 3 Kg 2) 1000g 3) 4000g

34) நிலாவின் வயது 2005 இல் 35 எனின் அவள் பிறந்தது எத்தனையாம் ஆண்டு?

1) 1975 இல் 2) 1970 இல் 3) 1980 இல்

35) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க?

1) பறவைகள் இரை தேடச் செல்கிறது
2) சிங்கம் பலம் வாய்ந்த மிருகம்
3) யானை ஒரு பெரிய மிருகம்

36) 


இடைவெளியில் வரவேண்டிய விடைத் தொகுதியை தெரிவு செய்க?


1) 43,68 2) 53,78 3) 65,75

37) ABCD → BCDE CDEF → ______


1) DEFD 2) DEFG 3) ABEF

38) பின்வருவனவற்றில் சரியான விடைத்தொகுதியை தெரிவு செய்க?



1) 16 ÷ 2 = 9 2) 20 ÷ 2 = 01 3) 14 ÷ 2 = 7

39)  உருவில் உள்ள நேரத்துக்கு ஒரு மணித் தியாலத்திற்கு முன்னர் உள்ள நேரம் யாது?

1) 12.00 மணி 2) 11.00 மணி 3) 09.00 மணி

40) 

அடுத்துவரும் உருவினை தெரிவு செய்க?

1)  2)  3) 